திரை நிலயம்

V. 5. No. 26. 7.6.1932

199140

ALANIL rAM

தனிப்ப விலை அணு முன

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரு. 7 8 0
புற நாடு ரு. 9 8 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

1 JUL 1932

Vol 5.] 1932 ஹு ஜூலை மீ 7உ [No. 26

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 501
2. தமிழ்ப்பாடம்
நளவெண்பா - கலிதொடர்காண்டம் 503
3. குன்றுடையானும் மக்களும்
W.V. கோவிந்தசாமி ராஜு B.A.,L.T. 505
4. இரங்கற்பாக்கள் (Grey's Elegy)
ராவ்சாகிப் C. M. இராமசந்திரம் செட்டியார், B.A., B.L., 507
5. எல்லாம் வீணே (ஓர் சிறுநாடகம்)
G S. இரகுராமன் B.A., 509
6. அப்பர் (64 கலைகள்—தர்க்கம்)
E. N. தணிகாசல முதலியார் B.A. B.L. 511
7. பொதிகைநிகண்டு
S. வையாபுரிப் பிள்ளை B.A.. B.L., 512
8. பெனிடிக்ட் டி ஸ்பைனோஸா
T. R. இராஜகோபால் 514
9. ஜூலியஸ் ஸீஸர் (அங்கம் 4. களம் 1)
ஷேக்ஸ்பியர் நாடகம் 515
10. கம்பராமாயணம் (கரன்வதைப் படலம்)
T. N. சேஷாசலம் B.A. B.L. 516
11. சொல்லூடாட்டம் 4 518
12. வர்த்தமானம் 519

கலாநிலயம்

விருப்பமும் கருவியும்.

எல்லோரும் எங்கெங்கும் இக்காலவாழ்க்கைவரன் முறையில் உயிருடன் உடலுந்தேய ஓயாமல் உழைக்கின்றார், காண்கின்றோம். அன்றன்று தம் அரைவயிற்றிற்கு வழிதேடி உழைக்கின்றார் பெரும்பாலோர்; தம் ஆயுளுள்ளளவும் முழுவயிறு அமர்ந்துண்ணற்குப் போதிய பொருள் பெற்றோரும் பிற்றைநாள் தம் மக்களுக்குப் பெருஞ்செல்வம் வைத்தேக வேண்டுமெனும் விருப்பினால் மேன்மேலும் பொருளீட்டியுழைக்கின்றார் பலர். தந்தைமார் ஈட்டிவைத்த பொருளைச் செலவழிக்கும் வகையில் உழைக்கின்ற மக்களும் உளர். செய்வதற் கொன்றுமின்மையால்பொழுதினை எங்ஙனம் போக்குவோம் என்று மிகவருந்தி உழைக்கின்றார் ஒரு சாரார். ஓடியும் ஆடியும் விளையாட்டிற்கு உழைப்பவர் தன்மையும் உணரத்தக்கதே. பேர் பெருகப் போரில் உழைப்பவர் ஒரு சிலர்.

இற்றைக்கு ஓர் இருபத்தைந்து ஆண்டு வரையில் உழைத்தவர்தம் நோக்கமுந் தொழிலும் பெரும்பாலும் முன்சொல்லியவைகளே யனைய வகைகளில் அடங்கிவிடும். புகழ்வேண்டிச் சிலர் கருமங்கள் பல முயல்வதுண்டெனினும் மெய்தளர்ந்து வாடுமாறு உழைப்பது அவர்களுக்கு உரியதன்று. எண்ணிய புகழ் எய்தாவிடத்து ஏக்கம் சிறிது எஞ்சலாம் எனினும் ஓய்வில்லாஉழைப்பே அவர் வாழ்க்கையத்தனையும் விழுங்கிக் கொள்வதில்லை. இன்னவர்தவிர, மற்றவர்க்குக் காரணம் இன்றியேயும் கேடுசெய்ய ஆங்காங்கு மிகவருந்தியுழைத்த கயவர்களும் ஒருவர், இருவர் இருந்திருக்கலாம். இனி, மற்றவர்களுடைய நன்மையின் பொருட்டு உழைத்தவர்களும் சிற்சிலர் இருந்திருக்கலாமாயினும் அதனையே தம் தொழிலாகக் கொண்டு விவகரித்தவர் அக்காலத்தில் அருமை.

இன்றைக்கு எத்திசையிலும் ஒரு பெரு முழக்கமும் உழைப்பும் நிகழ்கின்றன. முன்னுரைத்த உழைப்புக்களெல்லாம் இன்றும் இருக்கின்றனவாயினும் அவைகளுடன் உழைப்பின் புதிய ஓர் இனம் இப்பொழுது சேர்ந்திருக்கின்றது. இதனை "முன்னேற்ற உழைப்பு" என்று பொதுவாகக் கூறலாம். முன்னேற்றம் என்பதன் மெய்ப்பொருள் யாவதேயாயினும், தன்னுடைய முன்னேற்றத்திற்கு உழைக்கின்ற உழைப்பு முதலிற் சொன்னவைகளுடன் பொதுப்பட நிற்குமாதலால் அதனைத் தவிர்த்து நாம் இங்குச் சிறப்பாகக் கருதப்புகுவது பிறரது முன்னேற்றத்தின் பொருட்டு இடையறாது உழைக்கின்ற நிலைமையேயாகும். மொழிக் கென்றும் சமயத்திற்கென்றும் சாதிக்கென்றும் உழைப்பவர் ஒவ்வொரு திறத்தவர். மற்று, தேசத்தின்பொருட்டு உழைப்பவர்களாகவோ, உழைக்கவேண்டுமென்னும் ஊக்கமுடையவர்களாகவோ, அவ்வாறு உழைப்பவர்களைப் பாராட்டுகின்றவர்களாகவோ எல்லோரும் விவகரிக்கின்றனர். மொழித்தொண்டு சமயத்தொண்டு தேசத்தொண்டு என்றென்று இத் "தொண்டு" என்னுஞ் சொல் இக்காலம் அதிகமும் பெருமையுடன் வழங்கிவரலாகின்றது. இத்தொண்டர்களிற் பெரும்பாலோர், பேர் புகழ் பொருள் பூமாலை பத்திரிகைகளில் ஓர் படம் அனைய சயலாபங்கருதியே கண்டொன்றுங் காணாதொன்றும்

புரிகின்ற போலிகளாகின்றாரென்பது உண்மையேயாயினும், சிற்சிலர் வஞ்சனை சிறிதுமின்றி மற்றவர் முன்னேற்றமேநிலைத்தநினைவினராய்த் தம் மெய்வருத்தம் பொருளிழவு சுய ஆக்கம் முதலியவைகளைப் பாராமல் உழைக்கின்ற கொள்கையர் என்பதை ஒருபோதும் மறத்தலும் மறுத்தலும் ஆகாது. தேசம் என்றபெயரினால் தம் உயிரளவு தொண்டுசெய்கின்றதீரர்களின்தொகை நாளுக்குநாள் வளர்ந்துவரக் காண்கின்றோம். வஞ்சனைவளரும் நெஞ்சத்துப் போலிகளேனும்ஆகுக, அல்லது மெய்யேமுயல்கின்ற உத்தமர்கள் ஆயினும் ஆகுக; அதுபற்றி ஆராய்தல் இங்கு எம் கருத்தன்று. உண்மையில் இவர் அடைய வேண்டி முயல்கின்ற நோக்கமும் முடிவும் எத்தூரம் தர்க்கத்திற்கும் அனுபவத்திற்கும் ஏற்றவைகளாயிருக்கின்றன என்பதைச் சிறிதிங்குச் சோதித்தல் வேண்டும். இச்சோதனைகள் முன் இவ்விதழ்களின் பலவிடங்களிற் புரிந்திருக்கின்றோமாயினும், இப்பொழுது அதனையே வேறோர்வகையில் விளக்கவேண்டியவர்களா யிருக்கின்றோம். இவ்விளக்கத்தைத் துவக்குமுன் ஆங்கிலேயர்களுள் மிக அறிவாளியென்றும் நெடுந்தூரம். நோக்கவல்ல மதிநுட்பம் வாய்ந்தவரென்றும், வெளித்தோற்றத்தைப் பிய்த்தெறிந்து உள்நுழைந்து துருவுகின்ற திறமை நனி பெற்றவரென்றும் பேர் படைத்த H.G. வெல்ஸ் (H.G. Wells) என்பவர்சில மாதங்களுக்குமுன் ஆங்கிலப்பத்திரிகை யொன்றில் வரைந்துள வாக்கியங்களை இக்குப் பெயர்த்தெழுத வேண்டியவர்களாயிருக்கின்றோம். கூறுகின்றாரவர் :--

"Human life has become a world-wide thing, but governments remain cramped and partial things. More and more people are coming to realise this. Yet none of us know clearly how to change over to a more comprehensive and securer way of running the world. . . . And it is no good mincing matters when it comes to saying why we have not this universal well-being at the present time. Most of our rulers and directors are, to put it plainly, narrow-minded, self-centred, mentally indolent, pompous and pretentious creatures of the past. They are unwilling to put their minds through the humble and strenuous mental toil needed to raise the standard of their work, and we others are fools enough to tolerate the mismanagement. These ruling and controlling people have got enough for themselves, they stick to the controls like barnacles, they live in relative comfort and immense dignity, *chiefly engaged in the defence of their own conceit*, and they do not care a rap what happens to the mass of us, and the mass of us lacks the spirit, will and understanding to call them to account. A thousand million human beings are leading lives of want, limitation, humiliation, and toil; scores of millions are in immediate danger of the futile tortures of war, and these dull, self-protective folk, at the head of things and in control of things, do nothing of what they might do, and pose for our respect and admiration with infinite self-complacency."

"ஐயோ, பொதுஜனங்களுக்கு நல்லகாலம் பிறக்கமாட்டேன் என்கின்றதே! பசியும் பிணியும் ஓயாத உழைப்பும் இலக்ஷக்கணக்கான ஜனங்களை இடைவிடாது பீடிக்கின்றனவே! அழிதொழில் கொடியபோரொன்றும் புகும்போலிருக்கின்றதே. இவைகளினின்று ஓர் விமோசனம் இல்லையா? ஜனங்களை ஆள்கின்றவர்கள் தம்முடைய கருமமும் பெருமையுமேகருத்தாயிருக்கின்றார்களே யொழிய ஜனவாழ்க்கையை இனிதாக்கி அமைக்கும்வகை யாதென்று அறிய முயல்கின்றார்களில்லையே. ஆள்வோரெல்லாம் அவ்வாறாக, சனங்கள் இப்படியோ சாதற்கும் பதிலாய் உயிர் சுமந்திருத்தல் வேண்டும்" என்றென்று H. G. வெல்ஸ்என்பவர் கதறுகின்றார். இரண்டுவிடயங்களை நாம் மறக்காமல் மனத்திற் கொள்ளும்பொருட்டு இவ்வாக்கியங்களை இங்குப் பெயர்த்தெழுதினோம். மேனாட்டுவாழ்க்கையின் உண்மைநிலை இன்னதென்பதை உணரவேண்டியது ஒன்று; மற்றது, அந்தநிலை திருந்திச் சனங்கள் சுகம்பெறுவதற்கு வெல்ஸ் போன்றவர் எதனைக்கருவியாகக் கருதுகின்றனர் என்பது. இவ்விரண்டையும் உயத்துணர்ந்து பிறகு இவ்விந்தியதேசத்தில் அரசியலுரிமைமுதல் பலதுறைகளில் ஈடுபட்டு உழைப்பவர்களுடைய உள்ளக்கிடக்கையும் செயல்வகையும்பயன் விளைவுகளையும் சோதிக்கச்சோதிக்க மனிதர்தம் மயக்கம் சாலத்தெளிந்ததாகும். இதற்கயல் இந்த H. G. வெல்ஸ் என்பவரே நான்கு ஆண்டுகளுக்குமுன் எழுதியுள சிலவாசகங்களையும்இங்குக் கருத்துட்கொள்ள வேண்டும்:—

"For the first time in history over large parts of the earth the beating of inferiors has dissappeared. For the first time in history the common worker has leisure assigned to him as his right. Never have common people been so well clad or so well housed. Never have they had so much freedom of movement. There has been an extraordinary increase in social gentleness......The Common man today is happier than he has ever been, and with a clearer hope of continuing betterment. The common man in quite a little space of years may be better off than are even the fortunate few today."

நான்கு வருடங்களுக்குமுன் இவ்வண்ணம் ஜனங்களின் இன்பம் பெருகிவருகின்றதென்று உவந்துரைத்த இவ்வறிஞர் இச்சிறு காலத்திற்குள் மனந்தளர்ந்து மாழ்கும்படி நேர்ந்தது ஏன்? இரண்டிலொன்று பொய்யாதல் வேண்டும். நான்கு வருடங்களுக்குமுன் இன்பப்பெருக்கு எடுக்கத் தலைப்பட்டதென்று உரைத்ததேனும் பொய், அல்லது சனங்கள் இப்பொழுது வறுமையும் தாழ்மையும் அடைந்து இலக்ஷக்கணக்காய் வருந்துகின்றார்கள் என்றதேனும் பொய். இல்லையெனில் சரித்திரத்தில் அதுகாறும் காணப்பெறாதவோர் வகையில் பெருக்கெடுக்கத் தலைப்பட்ட இன்பவெள்ளத்தின் நம்பிக்கை நான்கு வருடங்களுக்குள் இப்படி அடியுடன் வறண்டுவிடல் இயலாது. எனினும் இதுதான் H. G. வெல்ஸ் நெஞ்சறிந்துரைத்த பொய்யென்றுங் கொள்ளவேண்டா. ஜன ஆட்சியின் பொறுப்பினை ஏற்றுக்கொண்டிருப்பவர் மனத்தால் முயன்று போதிய அளவு உழைக்காதிருப்பது தான் ஜனங்கள் நிலைகுலைந்து இழிவதற்குக் காரணம் என்கின்றார் இவ்வறிஞர். உலகத்தை நலமுற நடத்தும் வகை நம்மொருவருக்கும் தெரியவில்லையே என்று மறுபுறம் புலம்புபவரும் இவர்.

இதனிற்றான் இத்தகைய பொய்கள் புகுவதற்குரிய இரகசியம் அடங்கியிருக்கின்றது. இவரும் இவர் போன்ற பொதுஜனநல உழைப்பாளிகள் எண்ணிறந்தோரும் உலகம் எவ்வகையில் நலமுற நடக்கவேண்டுமென்று விரும்புகின்றனர் என்பதை மயக்கறத்தெளிந்ததேனும் தெரிவித்ததேனும் உண்டோ! அல்லது, ஆட்சிமுறையும் அதனைக் கைக்கொண்டு ஆள்கின்றவர்களும் இவர்தம் விருப்பத்திற்கேற்ற கருவியாய் எங்ஙனம் அமைதல் கூடும்... கருதியிருக்கின்றார்களோ!

199140
M2II, N2ICN
432.5.26

சொல்லப்படுகின்ற தற்குறிப்பேற்ற அணியேதான் இது. அந்தத் தற்குறிப்பேற்றவணி பொருளாலும் காரணத்தாலும் பயனாலும்மூன்று விதப்படும் என்று முன்னமே சொல்லி இருக்கின்றேன். (484-வது பக்கம்) இந்த மூன்றில் ஒவ்வொன்றிற்கும் இவ்விரண்டு உள்பிரிவுகள் இருக்கின்றன.

தற்குறிப்பேற்றம் மூன்றனுள் இச்செய்யுள் ஏதுத்தற் குறிப்பு. உண்மையில் பயம் காரணமாக அவ்வண்டுகள்பொங்கி எழுகின்றன. ஆனால் அந்தக் காரணத்தை நீக்கி, மாதர்களை வரவேற்பதற்காக எழுகின்றன வென்று அவைகள் எழுவதற்கு வேறு காரணம் அல்லது ஹேது குறித்தபடியால் இது ஏதுத் தற்குறிப்பேற்றம்ஆகின்றது. இந்த ஏதுத் தற்குறிப்பேற்றமும், உளபுலவேதுத் தற்குறிப்பேற்றம் என்றும் இல்புலவேதுத் தற்குறிப்பேற்றம் என்றும் இரண்டு விதப்படும். இவ்விரண்டிற்குமுள்ள வித்தியாசத்தை நாமிங்கு உதாரண வாயிலாகப் பார்ப்போம்.

(1) "எத்தனையோ துன்பத்திற் காளாக இப்பாழும் பிறவி எடுத்தேனென்று ஏங்குவனபோல் பிறந்ததும் குழவிகள் அழுகின்றன." இதனில், அழுகை என்ற செய்தி நிகழ்கின்றது. அவ்வழுகைக்குத்தான் இல்லாத காரணம் குறிப்பாக ஏற்றப்படுகின்றது. நிகழ்ச்சியிருக்கக் காரணம் மாத்திரம் கற்பிக்கின்றபடியால் இது உளபுலவேதுத் தற்குறிப்பு.. புலம் என்றால் இடம் அல்லது வயல் என்பது அர்த்தம். காரணம் வேறாயினும் ஒரு குறிப்பை ஏற்றுதற்கு நிகழ்ச்சி யென்னும் இடமாவது இருக்கின்றதெனும் கருத்தில் இதற்கு [உள - (இருக்கின்ற) புல - (இடத்தை உடைய) ஏது (காரண சம்பந்தமாயுண்டான) தன் - (கவியினுடைய) குறிப்பு - (கருத்தை) ஏற்ற-(மேற்கொண்ட) அணி - அலங்காரம்] உளபுல ஏதுத் தற்குறிப்பேற்ற வணி என்று பெயர் இட்டனர்.

(2) "நின் முகத்தழகைத் தானே பெறவேண்டுமென்று சந்திரனும் தாமரையும் தம்முள் போராடுவதாலன்றோ ஒன்றற்கொன்று பகையாகும்." சந்திரன் உதித்ததும் தாமரை குவிந்துகொள்வதை ஆதாரமாகவைத்து இதனில் ஒரு குறிப்பு ஏறி இருக்கின்றது. ஆகையால் இது தற்குறிப்பேற்றவணி. இவ்விதம் தாமரை குவிவதற்கு ஒரு காரணம் குறித்திருப்பதால் இது ஏதுத்தற்குறிப்பேற்ற வணியாம். அக்காரணம் பகை. எனினும், உண்மையாக, தாமரைக்கும் சந்திரனுக்கும் பகை யொன்றுமில்லை. பகையே இல்லாதிருக்க, முதலில் பகையொன்று இருப்பதுபோல் பாவனை செய்துகொண்டு, அந்தப் பகைக்கு, இம்மாதின் முகத்தழகைப் பெறவேண்டு மென்றதைக் காரணமாயமைத்ததால் இது இல்புல ஏதுத்தற்குறிப்பு.. அதாவது, இல்லாத இடத்தில் ஹேதுவொன்று ஏற்றிச் சொல்வதாம். சந்திரனைப் பகைத்தாற்போலத் தாமரை குவிந்தது-என்று நிற்குமாயின் உளபுல ஏதுத்தற்குறிப்பேற்றஅணி ஆவது காண்க.

ஏதுத்தற்குறிப்பேற்ற அணியில் இவ்விரண்டு வகைகள் இருப்பதுபோலவே, விரிபுலப் பொருள் தற்குறிப்பு, தொகைபுலப் பொருள்தற்குறிப்பு என்று பொருள் தற்குறிப்பிற்கும்; உளபுலப் பயன்தற்குறிப்பு, இல்புலப் பயன் தற்குறிப்பு என்று பயன்தற்குறிப்பிற்கும், இவ்விரண்டு பிரிவுகள் இருக்கின்றன. அவைகளை வருமிடத்தில் காண்போம். இப்படத்தை நினைவிற் கொள்வது நலம்.

- தற்குறிப் பேற்றவணி
  - (a) பொருள் தற்குறிப் பேற்றவணி
    - (1) விரிபுலப்பொருள் தற்குறிப் பேற்றவணி
    - (2) தொகைபுலப்பொருள் தற்குறிப் பேற்றவணி
  - (b) ஏதுத் தற்குறிப் பேற்றவணி
    - (1) உளபுல வேதுத் தற்குறிப் பேற்றவணி
    - (2) இல்புலவேதுத் தற்குறிப் பேற்றவணி
  - (c) பயன் தற்குறிப் பேற்றவணி
    - (1) உளபுலப்பயன் தற்குறிப் பேற்றவணி
    - (3) இல்புலப்பயன தற்குறிப் பேற்றவணி

மாதர் வந்து அடைந்ததால் பொங்கி எழுந்த வண்டுகள், அவர்களுக்குத் தேன்கொடுத் தழைப்பனபோல் ஒலித்தன, என்று இச்செய்யுளில் அமைந்த கருத்து ஏதுத்தற்குறிப்பேற்றவணி யென்றுகூறினேன். மாதர் வர வண்டுகள் எழுந்ததற்குக் காரணம் பயமா யிருக்கக் கவி தன் கருத்தின்படி 'அம்மாதரை எதிர்கொண்டழைக்க எழுந்தன' வென்று வேறு காரணம் குறிப்பதால் ஏதுத்தற்குறிப்பேற்றம் ஆயிற்று. எனின் இது, உளபுலமோ, இல்புலமோ? உளபுலந்தான். ஏனெனில், மாதர் வர, வண்டுகள் எழுந்தவரையில் வாஸ்தவமே. ஆகலால் கவி குறித்த காரணத்திற்கு வண்டுகள் எழுந்ததாகிய நிகழ்ச்சி யென்னும் இடம் ஒன்று உளது.

குறிப்பு:—(1) கொய்வான், என்பது பார்வைக்கு வினைமுற்றுமாதிரித் தோன்றினாலும் அது இங்கு வினைமுற்று அன்று. வினைமுற்றாயின் ஆண்பால் வினைமுற்றாகும். ஆயின் மங்கையர்கள் கொய்வான், என்று சேராதாகையால் இது முற்று அன்றென்று தெரிவது சுலபம். கொய்யும்பொருட்டு என்னும் அர்த்தத்தைத் தருகின்ற வினையெச்சம். "உண்பான் வந்தேன்," "கற்பான், வந்தனன்" என்ற இடங்களில் பான் என்பதைப்போல் இங்குக் கொய்வான் என்றதில் வந்த வான் என்பதும், ஒரு வினையெச்ச முடிவு. பாக்கு என்று கூட முடிகின்ற வினையெச்சங்கள் இருக்கின்றன.

கொய்வான், என்ற வினையெச்சம் வந்து என்ற மற்றொரு வினையெச்சத்தைக் கொண்டுமுடிய, அது காரணப்பொருளில் வந்திருக்கும் அடைய என்னும் இன்னொரு எச்சத்தைக் கொண்டு முடிகின்றது. அந்த அடைய என்னும் வினையெச்சம் பொங்கி என்னும் வினையெச்சத்தைக் கொண்டு முடிய, அப்பொங்கி என்பது எழுந்த என்னும் பெயரெச்சத்தைக் கொண்டு முடிகின்றது. எழுந்த என்னும் பெயரெச்சம் வண்டு என்னும் பெயர்ச்சொல்லைக் கொண்டு முடிகின்றது.

பெயரெச்சம் வினையெச்சம் இரண்டும்வினைச்சொற்களே யென்றும், பெயரெச்சம் பெயர்ச்சொல்லைக் கொண்டுமுடியும் என்றும், வினையெச்சம்வினைச்சொல்லைக் கொண்டுமுடியும் என்றும், இவ்விதம் வினையெச்

21 JUL 1932

தமிழ்ப் பாடம் 26.

நள வெண்பா—கலிதொடர் காண்டம்

[486-வது பக்கத் தொடர்ச்சி]

நெடுங்காலம் நளன் விதர்ப்பன் நகரிலே தமயந்தியுடன் தங்கியிருந்து,பிறகு அவ்விருவரும் நிடத நாடுநோக்கிப் புறப்படுவதோடு கலிதொடர் காண்டம் ஆரம்பமாகின்றது. அவ்வாறு புறப்பட்டவராய்த் தேரில் ஏறியதைச் செப்புகின்றது முதற்செய்யுள்.

—

தவளத் தனிக்குடையின் வெண்ணிழலுந் தையல்
குவளைக் கருநிழலுங் கொள்ளப்—பவளக்
கொழுந்தேறிச் செந்நெற் குலைசாய்க்கு நாடன்
செழுந்தேரி லேறினான் சென்று. 1.

காவியங்கள் ஒரு தலைவனது கதையைத் தொடர்ச்சியாய்க் கூறுவது மாத்திரமல்லாது, சில வர்ணனைகளும் அமையப்பெற்றிருக்கவேண்டு மென்பது மரபு. அவைதாம், கடவுள் வணக்கம், நாடு நகரம் மலை கடல் பருவம், சூரியனும் சந்திரனும் ஆகிய இரு சுடர்களும் தோன்றுவதும் மறைவதும், கலியாணம், சோலையில் விளையாடல், நீர் விளையாட்டு, மதுவருந்தி ஆடுதல், உலாவருதல், மந்திராலோசனை, ஊடல் கூடல் புதல்வர், தூது,படையெழுச்சி,போர் வெற்றி பட்டாபிஷேகம், முதலியன. பெரும்பான்மை எல்லாக் காவியங்களிலும் இவ்வுறுப்புக்கள் யாவும் வரவேண்டும். எனினும் கதைக்கு ஏற்றதில்லையாயின் சில உறுப்புக்கள் குறைந்தாலும் குறையலாம்.ஒன்று விடாமல் எல்லாம் எப்படியாவது வந்தே தீரவேண்டும் என்ற நியதியில்லை. கம்பராமாயணம் கந்தபுராணம் சீவகசிந்தாமணி போன்ற நூல்களில்,செய்யுள்கள் ஆயிரக்கணக்காய் அமைந்திருக்கின்றன வாதலால், முன்சொன்ன வருணனைகள் ஒவ்வொன்றும் பலவிடங்களில் இருபது முப்பது நாற்பது செய்யுள்கள் பெற்று விரிவாகக் கூறியிருக்கக் காணலாம். 'நளவெண்பா' நானூறு நானூற்றைம்பது செய்யுள்களுக்குள் அடங்கியவொருசிறுகாவியம். ஆதலால் இவ் வருணனைகளுக்கு ஆங்காங்கு ஒன்றிரண்டு செய்யுள்களுக்குமேல் கவி கொடுத்திலர்.

நளன் தன் மனையிலிருந்து முதலில் சோலைக்குச் சென்ற சந்தர்ப்பத்தில் இரண்டு செய்யுள்களால் உலா என்னும் பாகத்தைக் கவி வருணித்தார் என்று முன்னரே (83-வது பக்கம்) கூறி இருக்கின்றோம். நாடு நகர வர்ணனைகளும், அன்னத்தைத் தூதுவிட்ட தூதும், சுயம்வரம் திருமணம் கலவியிற் களித்தல் முதலிய செய்திகளும் சுயம்வரகாண்டத்தில் வந்திருக்கின்றன.

கலிதொடர் காண்டத்தின் முதல் பத்துப் பதினைந்து செய்யுள்களால் புகழேந்தி, பொழில் விளையாட்டும் நீர்விளையாட்டும் கூறுகின்றார். பொழில் விளையாட்டென்பது காதலனும் காதலியும் பூஞ்சோலை புகுந்து அங்குப் பூப்பறித்து விளையாடுவதைப் பலவகை அணிநயங்களோடு எடுத்துக் காட்டுவதாம். நீர் விளையாட்டென்பது அவர் நீராடி இன்புறுகின்ற செய்தியைக் கூறுவது.

நளனும் தமயந்தியும் தேரில் போகும்போது வழியிலே ஆங்காங்குள்ள சோலைகளிலும் குளங்களிலும் காதல் மைந்தரும் மாதரும் எய்த, அவர்தம்முள் நிகழ்வனவற்றை நளன் தமயந்திக்குக் காட்டுகின்ற முகமாக இக்காண்டத்தில் பொழில்விளையாட்டும் நீர் விளையாட்டும் சொல்லப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு நிகழ்ச்சியும் தனித்தனி ஒரு சித்திரம். அவை பின்வருவன.

—

மங்கையர்கள் வாச மலர்கொய்வான் வந்தடையப்
பொங்கி யெழுந்த பொறிவண்டு—கொங்கோ
டெதிர்கொண் டணைவனபோ லேங்குவன முத்தின்
கதிர்கொண்ட பூண்முலையாய் காண் 2.

பதப்பிரிவு:—மங்கையர்கள் வாசம் மலர் கொய்வான் வந்து அடைய பொங்கி எழுந்த பொறி வண்டு கொங்கோடு எதிர்கொண்டு அணைவனபோல் ஏங்குவன முத்தின் கதிர் கொண்ட பூண் முலையாய் காண்.

அன்வயம்—முத்தின் கதிர்கொண்ட பூண்முலையாய், மங்கையர்கள் வாச மலர்கொய்வான் வந்து அடைய, பொங்கியெழுந்த பொறிவண்டு கொங்கோடு எதிர்கொண்டு அணைவனபோல் ஏங்குவன, காண்.

கருத்து:—வழியிலுள்ள சோலையில் மாதர் சிலர் வருவதும், அதனால் பயமுற்ற வண்டுகள், பருகிய தேன் வாயிலேயே இருக்கக் கதுமென எழுந்து ஒலிப்பதும் நிகழ்வதை நளன் தமயந்திக்குக் காட்டினான்.

பதவுரை.

முத்தின் - முத்துமாலையின்
கதிர் - பிரகாசத்தை
கொண்ட - தழுவிக்கொண்ட
பூண் - ஆபரணங்களையணிந்த
முலையாய் - முலைகளையுடைய தமயந்தியே,
மங்கையர்கள் - மாதர்கள்
வாசம் - வாசனையுடைய
மலர் - மலர்களை
கொய்வான் - பறிக்கும்பொருட்டு
வந்து - (இச்சோலைக்கு)வந்து
அடைய - சேர்வதனால்
பொங்கி - உயர்ந்து
எழுந்த - கிளம்பிய
பொறி - புள்ளிகளையுடைய
வண்டு - வண்டுகள்
கொங்கோடு - (காணிக்கையாக) தேனை எடுத்துக் கொண்டு
எதிர்கொண்டு - (அம்மாதர்களை) எதிர்கொண்டு (அழைப்பதற்கு)
அணைவனபோல் - நெருங்குவனவற்றைப்போல்
ஏங்குவன - ஒலிக்கின்றவைகளை,
காண் - பார்ப்பாய்.

விரிவுரை:—இந்தச் செய்யுள் என்ன அணியால் அலங்கரிக்கப் பட்டிருக்கின்றது ? அணைவனபோல் என்று உவம உருபு வந்திருப்பதால் உவமையணி என்னப் படாது. கருத்தைப் பார்த்தல் வேண்டும். அதற்கு இது உவமையென்று இரண்டு விடயங்களைச் சம்பந்தப்படுத்திக் காட்டவில்லையாதலால், இது உவமையணியன்று. மனிதர் வருவதால் வண்டுகள் பறந்து அகலும் நிகழ்ச்சிக்குக் கவி தன்னுடைய குறிப்பு ஒன்றையேற்றிச்சொல்வதால் உத்ப்ரேக்ஷாலங்காரம் என்று

சம் கொண்டுமுடிகின்ற வினைச்சொற்கள், வினைமுற்றாகவேனும் வினையெச்சமாகவேனும் பெயரெச்சமாகவேனும் இருக்கலாம் என்றும் முன் பல இடங்களில் சொல்லியிருப்பதை நினைவுபடுத்திக் கொள்க.

(2) வினைச்சொல்லில், வினையால் அணையும்பெயர் என்பது ஒன்று.

ஒரு காரியம் (அல்லது வினை அல்லது தொழில்) சம்பந்தமாக மூன்று விஷயங்கள் குறிக்கலாம்:—

(a) அந்தத் தொழிலின் பெயர் இன்னதென்று குறிக்கலாம். உதாரணம்: கொலை, கல்வி, நடத்தல், ஈகை, முதலியன. இவை கொல்வதென்றும் கற்பதென்றும் நடப்பதென்றும் ஈதலென்றும் இருக்கின்ற தொழில்களின் பெயர் இது இது வென்று சொல்கின்றன. இப்படித் தொழில்களின் பெயரைச் சொல்வன பெயர்ச்சொல் ஆகும். வினைச்சொற்களல்ல. ஒரு விஷயத்தின் பெயரைக் குறிப்பது பெயர்ச்சொல் என்ற விதிப்படி, தொழில் ஆகிய விஷயத்தின் பெயரைக் குறிக்கின்றபடியால், இவைகளைத் தொழிற்பெயர் என்று இலக்கணம் அழைக்கும்.

(2) ஒரு தொழில் செய்வதைப்பற்றிக் குறிக்கின்ற சமயத்தில் அச்சொல் வினைச்சொல் ஆகும் என்று முன்னரே கற்றிருக்கின்றீர். கொன்றேன், கற்கின்றாய், நடந்தாள், ஈவோம், என்ற உதாரணங்களில் அவ்வத் தொழில்களின் பெயர் இன்னவென்று குறிக்கப்படவில்லை. ஆனால் அச்செயல்கள் செய்யப்படுகின்றதை அச்சொற்கள் காட்டுகின்றன. இவை வினைச்சொல்.

(3) இனி, ஒருவிதத்தில் பெயர்ச்சொல் போலவும் மறுவிதத்தில் வினைச்சொல் போலவும் நடக்கின்ற சில சொற்கள் இருக்கின்றன. உதாரணம்: "போர் வென்றவனை வீரன் என்றழைப்பர்." இதில் வென்றவன் என்பது வெல்லுவதாகிய தொழிலின் பெயரைக்காட்டவில்லை, ஆதலால் அது தொழிற்பெயரன்று. வெல்லும் தொழிலின் பெயர் வெற்றி. மற்று இங்கு வென்றவன் என்பது வெல்லுதலாகிய தொழில் நடைபெறுவதைப் பற்றியுஞ் சொல்லவில்லை. போர் வென்றேன் அல்லது வெல்லுவான் என்பன போல் இருந்தால்,வினைமுற்றாகலாம். வென்றவன் என்பது வெல்லும் தொழிலின் பெயருமன்று, வெல்வதாகிய செய்கையைச் சொல்வது மன்று. வென்ற ஒருவனைப்பற்றிக் குறிக்கின்றது. ஆதலால் அதற்கு வினையால்அணையும் பெயர், எனப் பெயர் வழங்கினர்.

வென்றவனது பெயரைச் சொல்கின்றதோ என்றும் எண்ண வேண்டா. அவன் பேர் வீரன். அது தொழிலின் பெயரையும் சொல்லவில்லை, செய்தவன் பெயரையும் சொல்லவில்லை. செய்வதையும் சொல்லவில்லை. ஒருவன் செய்வதாகச் சொல்கின்றது. அம் மட்டே.

கொன்றவன் நிற்பவன் கற்றவள் பார்ப்பவர், என்பன போன்ற உருவங்களில் வினையாலணையும்பெயர் சாதாரணமாக வரும். எனினும், "கற்றார் கற்றாரை விரும்புவர்," என்றபடி கற்றார் என்பது வினைமுற்றின் உருவம். இருப்பினும் இங்கு அது வினையாலணையும் பெயர். "இப்பிள்ளைகள் பாடம் கற்றார்," என்ற இடத்தில் கற்றார் வினைமுற்றாயும் முன் உதாரணத்தில் அது வினையாலணையும் பெயராகவும் இருப்பதைக் காண்க.

இந்தச் செய்யுளில் அணைவன, ஏங்குவன என்ற இரண்டு சொற்களும் வினையாலணையும் பெயர்கள். "அணைகின்றவைகளைப் போல் ஒலிக்கின்றவைகளைப் பார்" என்று பொருள்படுத்திக்கொள்ளவேண்டும்.

குன்றுடையானும் மக்களும்

இரண்டாம் புத்தகம் — 3. கிளிப்போர்

[484-வது பக்கத் தொடர்ச்சி]

ஒரு நாழிகையில் சின்னண்ணனும் துணைவரும் வீரமலையை யடைந்து தூரத்தே வேடுவர் விளையாடுதலைக் கண்டனர். சாம்பான் சின்னண்ணனைப் பணிந்தெழுந்து, 'சுவாமி, அடியேன் கைத்திறத்தை இன்று பார்த்தருளவேண்டும். தாங்கள் படையோடு இந்தக் காட்டில் மறைந்திருங்கள், நான் தனியே சென்று குப்பாயை மீட்கிறேன்' என்றான். சின்னண்ணனும் சாம்பான் வேண்டுகோளுக் கிசைந்தான்.

சாம்பான் உடம்புமுழுதும் புழுதிபடியக் கீழே விழுந்து புரண்டெழுந்தான். தான் உடுத்திருந்தவேட்டியைக் கிழித்துத் துண்டாக்கி முழங்காலுயரமாய்த் தொங்கக் கட்டினான். அங்குக் கிடந்த ஒரு முள்ளையெடுத்து உடம்பிற் கீறு காயங்களை உண்டாக்கினான். ஒரு நீண்ட செடியை ஒடித்துத் தடியாக்கி, வேடுவர் தங்கியிருக்கும் இடத்துக்குச் சிறிது தூரத்தில் முயற்குட்டி தேடுபவன்போல் புதர் புதராய் அத் தடியால் அடித்தான்.

இதற்குள் பலபலவெனப் பொழுதும் புலர்ந்தது. வேடுவர் பல்விளக்கிக் கட்டிச்சோறுண்ணத் தொடங்குகையில், சாம்பானைக் கண்ணுற்று அவனைத் தம்பால் வருமாறு கூப்பிட்டனர். அவன் நடுநடுங்கிக் குறுகிக், கைகட்டி வாய்புதைத்து அவர்களுக்கு எதிரே சென்று வணங்கி நின்றான்.

வேடுவர்:—யாரடா, நீ?

சாம்பான்:— சாமி, எம்பேரு சாம்பான். நானு குதரைக்காரப் பறயனுங்கோ.

வேடுவர்:—யாருடைய குதிரைக்காரப் பறையன் ?

சாம்பான்:—சாமி, சித்தாலப் பட்டணத்து அண்ணம்மாரொடய குதரக்காரப் பறயனுங்கோ.

வேடுவர்:— அண்ணன்மாருடைய குதிரைக்காரப் பறையனென்கிறாய். ஏன் அழுக்குத் துணி யுடுத்திருக்கிறாய்? உடம்பெல்லாம் காயமாயிருக்கிறது?

சாம்பான்:—சாமி, அந்த அநியாயத்தெ ஏங் கேக்கறீங்க? (திரும்பிப் பார்த்துப் பயந்தவன்போல் நடித்து, கண்ணீர் சொரிந்து) குதர சரியா மேய்க்கலீண்ணு நேத்து கொறடாவுலே அடிச்ச அடி-தெய்வமே! உனக்குக் கண்ணில்லியா? இப்பொ நெனச்சாக்கூட பதறுது, 'சாமீ. சாமீ, முப்பது குதரே மேய்க்கறதுக்கு மாசம் கூலி ஒரு மொடா நெல்லு! இந்தக் கூலி எங்கே காணுஞ் சாமி? நாலு புள்ளைக, ஒரு பொண்

டாட்டி, பெத்தவோ ஒருத்தி இத்தனபேரெ வச்சுக்கிட்டு எப்பிடிக் கால மோட்றது, சாமி? அதுக்குத் தான் சாத்துக்கு ஒரு மொசக்குட்டி தேட வந்தனுங்கோ. (திரும்பிப் பார்த்து மீண்டும் நடுங்குபவன் போல் நடித்து) சாமி, எனக்கு உத்தரவு குடுங்கோ. உண்ணம் ஒரு நாழியிலே குதரக்கிப் புல்லுக்கொண்டு போகாதே போனு, அந்தக் கருமிகோ சும்மா உடமாட்டாங்க, சாமி; எந்தாலி யறுந்துபோகுஞ் சாமி. நானு என்ன பண்ணட்டுஞ் சாமி? பொழைக்க வழி தெரியிலியே. (என்று சொல்லிக் கண்ணீர் துடைத்துக் கும்பிட்டுப் போவதற்குத் திரும்பி நாலடியெடுத்து வைத்தான்).

வேடுவர்:—(சாம்பான் சிறந்த வீரன் என்பதை அவன் கையையும் காலையும் பார்த்து அறிந்து, அவன் தம் பக்கலில் இருந்தால் பகைவரை எளிதாக வெல்லலாம் என்று நினைத்து, குசுகுசுவென ஒருவரோடொருவர் பேசி) அடே, சாம்பா, வா, போகலாம், என்றழைத்தனர்.

சாம்பான்:—(திரும்பிவந்து) ஏஞ் சாமி கூப்புட்டீங்கொ?

வேடுவர்:—எங்கள் நாட்டுக்கு எங்களோடு வருகிறாயா? வீட்டுக்கு ஒரு மிடாவும், அடித்த களத்துக்கு ஒரு வள்ளமும், வீட்டுக்கொரு மாடும் கொடுக்கிறோம். நீ கறுப்பற்று இருக்கலாம்.

சாம்பான்:—போதுஞ் சாமி. அவ்வளவு கெடச்சா போதுமுங்கொ. தாங்கொ சொல்றது மெய்யானு, அப்புறம் சொல்றேன். அந்த அண்ணம்மாருக்கு வழி!

வேடுவர்:—நாங்கள் கட்டிச்சோறு உண்கிறோம், நீயும் ஒரு வாய் உண்ணு வா.

சாம்பான்:—சாமி, உண்ணத் தடையில்லீங்கொ. ஆனாலும்—

வேடுவர்:—என்னடா, தயங்குகிறாய்? 'ஆனாலும்' என்ன?

சாம்பான்:—சொல்லப் பயமாகுதுங்கொ.

வேடுவர்:—சும்மா சொல்.

சாம்பான்:—(குறுகிக் கைகட்டி) மேல்நாட்டு வேடுவர்களை நம்பக்கூடாதிண்ணு நம்ப சீமையிலெ சொல்லுவாங்கொ சாமி; நானு ஒங்களை நம்பிவந்துட்டா அப்பாலே நீங்கொ என்னைக் கைவிட்டுப்போட்டா நானென்ன பண்றது, சாமி? என்னைக் காப்பாத்தறது உறுதி யிண்ணு நீங்கொ ஒப்புச் சத்தியஞ் செய்து குடுத்தா.

வேடுவர்:—(கொல்லென நகைத்து) எப்படிச் சத்தியஞ் செய்ய வேண்டுமென்கிறாய்?

சாம்பான்:—சாமி, இதொ பாருங்கோ, இந்தத் திருகுகள்ளி வேலியிலே ஒரு நுழைநடவு இருக்குது. நீங்கோ ஒவ்வொருத்தரா உங்க ஆயுதத்தெ கீழே போட்டுத் தாண்டிச் சத்தியம் பண்ணிக் குடுத்து அந்தக் கடவுக்குள்ளே போனீங்கண்ணு, நானு உங்க கூடவே வாறேஞ் சாமி.

வேடுவர், 'இதுதானு பெரிய காரியம்?' என்று சொல்லி, தம்தம் ஆயுதத்தைக் கீழேபோட்டு, அதைத் தாண்டி, கடவுக்குள் நுழைந்துசென்று வேலிக்கு அப்பால் நின்றனர்.

சாம்பான் அதுவே சமயம் என்றுணர்ந்து அவர்களுடைய ஆயுதங்களை வாரித் தூரத்தே குவித்து, ஒரு வாளைக் கையிற்பற்றி, குப்பாயைப் பல்லக்கினின்றும் வெளியே வருமாறு கூவினன்.

இதற்குள் வேடுவர் சாம்பான் செய்த சதியை யுணர்ந்து, கடவுக்குள் நுழைந்து வெளியில் வர முயன்றனர். வேடுவர் நுழைபுந்தோறும் வீர சாம்பான் அவர்களை வாளால்வெட்டி வெட்டி வீழ்த்தினன். வேடுவர் ஓவென் றோலமிட்டுத் திருகுகள்ளி வேலியைப் பிடுங்கி யெறிந்து வழிசெய்து பாய்ந்து வந்து சாம்பானைச் சூழ்ந்தனர். தன் பக்கலுக்கு வந்த குப்பாயை ஆயுதக் குவியலுக்குப் பின்னே நிறுத்தி, சாம்பான் அவளைச் சுற்றிச்சுற்றி வாள்வீசி, வந்தவந்த வேடுவரை வெட்டி வீழ்த்திக் காவல்செய்தான். இங்ஙனம் ஆயிரவரை யெதிர்த்துச் சாம்பான் எத்துணை நேரம் பொருதல் கூடும்? வேட்டுவப்படை கை யறுந்தும் காலறுந்தும் மண்டையுடைந்து சிதறுண்டதாயினும், மேல்விழுந்து முன்னேறி, ஆயுதங்களைச் சிறிது சிறிதாய்க் கைப்பற்றி, 'அடியுங்கள், பிடியுங்கள்' என்று கூவிச் சாம்பானை நெருக்கிற்று.

இந்த இடர்ப்பாடான வேளையிலே சின்னண்ணன் மைத்துனனோடும் படையோடும் குலவையிட்டுப் பாய்ந்து வந்தான். அவனைக் கண்ட அளவிலேயே வேடுவரிற்சிலர் கலங்கிமுரிந்தோடினர். படையோடுபடை கைகலந்தது. சீறுபுலி சின்னண்ணன் மந்திரவாளை உருவி, ஆர்ப்பரித்துப் பற்கடித்து வெள்ளரிக்காய்போல வீசினன் வேடுவரை. வெள்ளிக்கட்டு வேலெடுத்து மைத்துனன் வீறிட்டுக் குத்தினன். அப்பொழுது வேட்டுவப் படை கலங்கிப் புரண்டு அலற, சிலர் 'ஐயோ! சிவனே! இந்தக் கொள்ளைக்கு ஏன் வந்தோம்? கொள்ளைக்கு வந்த இடத்தில் குடிகேடு வந்ததே!' என்று புலம்பி வீழ்ந்தனர்; சிலர் மூட்டைகளை யெறிந்துவிட்டு முடுகியோடினர். ஓடின வேடுவரையெல்லாம் மறித்து மறித்துக் குடல்சரியக் குத்தினர் சிற்றூலைப் பட்டணத்தார். வேட்டுவப்படை ஆடிக்காற்றிலகப்பட்ட பூளைப்பூப்போல் பறந்தது.

ஓடுகின்ற வேடுவரைத் துரத்திச்சென்ற சாம்பான், ஆங்கோரிடத்திலே, இருமருங்கிலும் கள்ளியும் கற்றாழையும் வேம்பும் தழைந்தோங்கிப் புதராய்க்கிடக்க, அவற்றின் நடுவில் உயர்ந்துநின்ற ஒரு பாறையின் மீது வேடுவர் ஏறி, அதன் உச்சியினின்றும் கீழே இருந்த பள்ளத்தில் முன்பின் பாராமல் குதித்து எழுந்தோடுதலைக்கண்டு, தானுமப் பள்ளத்திற் குதித்தெழுந்து பாறையினடியில் மறைந்து நின்று, தனக்குப்பின்னே வேடுவர்வந்து அப்பள்ளத்தில் விழுந்தோறும் விழுந்தோறும் அவர்களைப் பற்றியிழுத்து, அவர்களுடைய மூக்குகளை ஒவ்வொன்றாக வாளால் அரிந்தரிந்து மலைபோற் குவித்தான். சிறிதுநேரம் சென்றபின், இரிந்தோடிய வேடுவரைத் துரத்திச் சென்ற சின்னண்ணன் இப்பள்ளத்துக்கு வந்து, சாம்பான்செய்யும் வினையைக்கண்டு, வயிறுவலிக்க நகைத்து, 'சாம்பா, இனி மூக்கறுக்கவேண்டா விட்டுவிடு வேடுவரை, போய்ப்பிழைக்கட்டும், பாவம்!' என்றான்.

பின்பு மூக்குகளை மூட்டைகட்டி யெடுத்துக்கொண்டு சாம்பான் பின்தொடரச் சின்னண்ணன் போர்க்களத்துக்குத் திரும்பிப்போய், வேடுவர் போகட்டுப் போன கொள்ளைப்பொருள்களை யெல்லாந் திரட்டி, வகைவகையாகப் பிரித்து வைத்து, பொன்னருக்குச் செய்தி சொல்லியனுப்பினன்.

பொன்னர் அச்செய்திகேட்டுக் களிப்புற்றுப்போர்க்களத்துக்குச் சென்று, பச்சையண்ண முதலியையும்

திருக்காம்புலியூர்க் குடிகளையும் அழைப்பித்து, கொள்ளைதிரும்பின பொருள்களையெல்லாம் பறிகொடுத்தோர்க்குப் பங்கிட்டுக் கொடுத்து, குப்பாயை மூடுபல்லக்கில் வைத்துத் தக்க காவல் நியமித்து அவள் தந்தையோடு திருக்காம்புலியூருக்கு அனுப்பிவிட்டு, தம்பியோடும் மைத்துனனோடும் வீரசாம்பானோடும் வெற்றிக் கொம்பூத ஊருக்குத் திரும்பினர்.

வீரசாம்பான் தான் அறுத்த மூக்குகளை ஒணன் கொடியிற் கோத்து, சிற்றூலைப்பட்டணத்து மூக்கைய்ம்மன் கோவில் தலைவாசலில் தோரணம் கட்டினன்.

அண்ணன்மார் சாம்பானது வீரத்தை மெச்சி, கட்டளை * கொடுத்து அவனை உபசரித்தனர்.

இப்படிச் சில நாட்கள் கழிந்தன.

* 60 முழத் துப்பட்டியும் மஞ்சள்தோய்த்த போராடையும் கட்டளை யெனப்படும்.

இரங்கற்பாக்கள்.

பகல்கழிய மணியோசை
பகர்கிறதே துயர்விடுத்துப்
படர்வெளியில் நிரையினமும்
பையவொலித் தேகிறதே
நுகத்தடியோ னகம்வேட்டு
நொந்தனனுப் நடக்கின்றான்.
நுண்ணுலக நள்ளிருட்டு ,
நின்றதுவா லென்றனக்கே. 1.

நிலப்பரப்பின் தோற்றமுமே
நீங்கியதே சிற்றொளியில்
நீள்விசும்பும் நிச்சப்தம்
நிறைந்துளதா லெவ்விடமும்
குலவண்டு பணியின்றிக்
குவலயத்தே பறக்குமொலி
குடிநிலத்துப் பட்டியிலே
கிண்கிணியி னொலிதவிர. 2.

கொடிபடரு மாங்குள்ள
கோபுரத்தி னுச்சியிலே
குறையிடுமோர் தனியாந்தை
குளிர்மதிக்கே குறையிடுமால்
அடிபடரு மக்களின
மருகணைந்து தன்தனிமை
அரும்பழமை யரசியலை
அலைக்கழிக்கும் வகைகூறி. 3.

கரடுகளாய்க் கவைவிட்ட
காட்டகத்து மரநிழலில்
கவிழ்ந்திருக்கும் புற்றரையின்
குவியலிலே பற்பலவாய்
முரடுகளாய் முன்வாழ்ந்த
மூதூரின் தாதையர்கள்
முந்துறசிற் குழியிடமே
தூங்குவரா லெஞ்ஞான்றும். 4.

மணம்வீசும் வைகறையின்
மருத்தென்றல் தன்விளியும்
வைக்கோலின் கூறையின்வாய்
வான்குருவி கத்துதலும்
குணங்கூர்ந்த கோழியுடன்
கொம்பினொலி யிவையெல்லாம்
கொஞ்சமுமே யன்னாரை
யமளியினின் றெழுப்பாதால். 5.

அன்னார்க்கோ வெஞ்ஞான்று
மடுப்பெரிக்க மூட்டாரால்
அகத்தினுமே மனைக்கிழத்தி
யரும்பணியுந் தொடராளால்
அன்னாரை வரவேற்க
வருஞ்சிரார்கள் முந்தோடி
அருமுத்தம் பெறவேண்டி
யவர்மேலே தொத்தாரால். 6.

பயிரெல்லாங் கொடுவாளில்
பட்டுவிடு மவர்தம்மால்
படுநிலமு மவரேரில்
படிந்துவிடு மெப்பொழுதும்
உயிரெல்லா மகிழ்வுறவே
யுழுதோரை மூட்டுவரால்
உறுதியிலே யடிக்கவுமே
யுறுமடவி பொடியாகும். 7.

பயன்கொடுக்கு முழைப்பினையும்
பாராட்டும் மனைவிழவும்
படுங்குறிக்கோ ளிலாவகையும்
பேராசை யேய்க்காது
இயன்கொடுக்கு மேழைமையி
னீறில்லாச் செயல்களையே
இடாம்பீகம் புன்சிரிப்போ
டிகழ்தலுமே வேண்டுவதில். 8.

கனந்தங்குந் தற்புகழுங்
கண்கவரும் டாம்பீகம்
கனிவனப்பும் பொருட்செல்வங்
காண்பிக்கு மிவையெல்லாம்
இனந்தங்கு மிறுதியினை
யெதிர்நோக்கி யிருப்பரேயாம்
இரும்புகழின் வழியுந்தான்
னிடுகுழிக்கே சென்றிடுமால். 9.

நெடுஞ்சுவருஞ் சித்திரமும்
நிறைந்தெழுந்த சமாதியிலே
நேர்ந்துளதாங் கல்லெழுத்து
நிகழ்புகழை யெடுத்துரைக்கா
இடுங்குழிமேல் நினைப்பூட்ட
யாதொன்று மிழைத்திலரேல்
இவருடைய பிழையன்றே
யெனநினைப்பீர் செல்வர்காள். 10.

அருஞ்சமாதிக் கட்டடமு
மழகியதோ ருருச்சிலையும்
அடக்கியுறு முயிரினையே
யழைத்துவரு மெனலாமோ
தருந்தானோ கௌரவமுந்
தண்சாம்பற் குயிரையுமே
தற்புகழ்ச்சி யமன்காதி
லேறிடுமோ தப்புவிக்க. 11.

ஒருகாலித் திக்கில்லா
வோரிடத்து ளமைதலுறும்
உண்மையருள் சோதிதிக
ழுள்ளமுடைப் பெரியானும்
இருவுலகின் செங்கோலை
யேற்கவல்ல கைகளுடன்
யாழினைத்தான் திருத்தமுற
வியக்கவல கரங்களுடன் 12.

எனனுந்தான் ஞானமுமே
யெண்ணறிய நூலானும்
இயற்காலப் பொருளானு
மிவர்மாட்டுப் புகவில்லை
மனவெழுச்சிக் கண்ணியத்தை
மடக்கிவிடும் நல்குரவு
மலிந்தோடு முயிரொழுச்சி
மங்காதே யுறைந்திடுமால் 13.

கடலடியிற் புகவொண்ணுக்
கருங்குகையில் நிறைந்துளதாம்
கணக்கிலவாத் தெளிநீர்மைக்
கலங்கமிலா மணிவகைகள்
மடலடியிற் பூவினமும்
மணமெவரு முகரொணுது
மறைவினிலே விரயமுமாய்
மணல்வெளியே யுதித்திடுமால் 14.

சிற்றூரி னொருகாந்தி
திடவுறுதி நெஞ்சினனுய்ச்
சிறுநிலத்தி னிராக்கதனைச்
சிறப்புடனே யெதிர்த்திடுவான்
கற்றோர்ந்தும் வாய்திறவாக்
கம்பனுமே யமர்ந்திருப்பான்
குருதியினைச் சிந்துமொரு
குற்றமிலா வீரனுடன். 15.

அரசியலா ரவைகளுமே
யகமகிழ வாளுவதும்
அகத்துன்பத் தொடுபாழு
மார்நிலைமை வெறுத்தலுமே
சரசமுமாய்ச் செழுநிலத்தே
சகல்பொருள் தருதலுமே
சரிதத்தைப் புதிதாக்கல்
சார்ந்திலதா மிவர்விதியில். 16.

நற்குணமு மேலடையத்
துற்குணமுங் கீழடைய
நாற்றிசையும் புகழுவன
நாடாதே யிருந்தனவால்
துற்கொலையா லரசியலைத்
தொலைத்திடவே தாமடைதல்
தொல்லுலகி லிரக்கமதைத்
தொலைத்தலுடன் தாமறியார். 17.

மனதறிந்த மெய்வினைக்கும்
வேதனைகள் மறைத்திடலும்
மலியுக்தி நாணமதன்
மல்குகுறி யமிழ்த்திடலும்
தனதறிவின் கவித்திறத்தால்
தற்பெருமை யுல்லாசம்
தகுவோர்க்கு முகமனிடல்
தாமெதுவு மறியாரே. 18.

குறிக்கோளொன் றில்லாத
குழுவினர்தாங் கண்ணியமில்
குடிவாழ்வின் சச்சரவைக்
கொஞ்சமுமே விட்டகலார்
நெறிக்கோட்டுக் குளிர்வாய்ந்த
நேர்வாழ்க்கைச் சார்பினிலே
நெறிதனிலே யரவமிலா
நீள்வாழ்வு கொள்பவரால். 19.

எனினுமிந்த நீத்தோரை
யெவரேனு மவமதிக்கா
வண்ணமுமே சிற்சின்ன
மேம்மையிலே வைத்துள்ளார்
இனியதிலே புன்கவியோ
டிழிசிற்பம் வரைந்துளதால்
எதிர்வருவோர் நெஞ்சிலொரு
விரக்கமொழி பெறுவதுவால். 20.

கல்லாத கவியொருவன்
கண்டெழுதும் பேராயுள்
கடைநாளே நல்லிசையுங்
கவிச்சுவையுந் தருவனவாம்
சொல்லாரும் புனிதமுமாஞ்
சுருதிமொழி வரைந்திருத்தல்
சுயநாட்டுப் பெரியார்க்குத்
துறக்கவழி கற்பிக்கும் 21.

எதிர்நோக்கி யுளமிசைய
மெவனொருவன் கீழ்ப்படிந்தே
எழின்மகிழ்ச்சி யுறுநாளி
னியல்பினையே விட்டவனுய்க்
கதிநோக்கி முன்சென்ற
காலமதை நினையானுல்
கவிபேசா மறதியின்பால்
கட்டுண்ட தென்கொல்லோ 22.

போமுயிர்தான் பின்னின்ற
பொன்னெஞ்சு தானொன்றில்
புனிதமுமாங் கண்துளிகள்
பூத்துவர வெதிர்நோக்கும்
ஈமமத னுள்நின்று
மியற்கையொலி கூவிடுமே
எமதுநீறு தனியேயு
மெரிகனலு முயிர்த்திடுமால் 23.

மதித்திராத விறந்தவரை
மதித்திட்டே யிப்பாக்கள்
மகிமையிலாச் சரிதமதை
மலிந்திடலுங் கேட்பீரேல்
விதித்திருந்தா லொருவேளை
வினைவிட்டுத் தனியிருப்பின்
விளித்திடுவா னோரன்பன்
விதிதனையே விரிப்பவனுய் 24.

நரைதிரண்ட குடியண்ணல்
நனியிவையே சொல்லுவனுல்
நனிநாமும் மவன்றனையே
நாளுதிக்கக் கண்டிருப்போம்
உறைபனியை யுதைத்தெறிந்தே
யுதித்துவரும் ஞாயிற்றை
உயர்நிலத்தே கண்காண
வூக்கமுடன் செல்வானே 25.

அதோகாணுந் தொன்மையதா
யடிவேர்கள் விசித்திரமாய்
அமைந்திருக்க வசைவாடு
மம்மரத்தி னடியினிலே
எதோகாணுங் குறிப்பில்லா
வியல்பினிலே பகல்வேளை
உடல்நீட்டிக் கொப்புளிக்கும்
யாற்றினையே நோக்கிடுவான் 26.

நிந்தனைபோல் முறுவலிக்கும்
நீளடவி யருகினிலே
நினைவேகும் வழியெல்லாம்
பிதற்றிட்டுத் திரிந்திடுவான்
சிந்தனையால் பித்துற்றோ
சீரழிந்தோ துயருற்றோ
சிற்காத லலைப்பட்டோ
சிரசிரங்க அலைந்திடுவான். 27.

ஓரொருநாள் வழக்கம்போ
லுயர்நிலத்து மவன்தானே
உலர்ந்திட்ட மரத்தருகும்
புற்றரையுங் காண்கிலனுல்
வேறொருநாள் வந்ததுவே
வீழருவி யருகிலுமே
வெருந்தரையு மடவியிலு
மவன்தன்னைக் காண்கிலனே 28.

துயருற்ற கோலத்தே
தூக்கிச்செல் பாடையிலே
துறந்தவுயி ரவனையுமே
தொல்மயானப் பாங்கரிலே
அயருற்று மெதுவாக
வனுகுவதைக் கண்டனனுல்
அருகுற்றுக் கன்மீதே
யமைத்துள்ளதை யோதுவையே 29.

(கல்வெட்டு.)

நிலமடந்தை துடைமீதே
நிலைத்துளதே யவன்சிரமும்
நிலைபுகழி னதிட்டத்தின்
நிலையறியான் வாலிபனும்
கலைமடந்தை யேழையனைக்
கண்டறியாள் துக்கமுமே
கணந்தோறு மவன்நெஞ்சைக்
கடிந்திழுத்துக் கொண்டழுத்தும். 30.

ஈகையெனி லவன்தனதே
யின்னுயிரு மெய்ம்மையதே
ஈசனுமே யருளினனு
லிவன்றனக்கோ ருதவியுமே
ஈகையிலே வலியோர்க்குக்
கண்ணீரொன் றகுப்பானுல்
ஈசனிட மவன்கேட்ட
வினியநட்பு பெற்றனனுல் 31.

அவன்திறத்தை யினிமேலும்
மறியவிச்சை யுறவேண்டா
அஞ்சுமவர் நிலையினிலே
யவன்குறைகள் சொலவேண்டா
அவன்தந்தை யவனீச
னருள்மார்பை யுற்றுற்றே
அருமந்த நம்பிக்கை
யமைந்துளனு யமர்ந்துள்ளான் 32.

குறிப்பு:—ஆங்கிலத்தில் தாமஸ் கிரே என்ற கவிஞர் எழுதிய எலிஜி என்னும் புகழ்வாய்ந்த நூலினைத் தழுவியன இவ் விரங்கற்பாக்கள்.

எல்லாம் வீணே?

ஒரு சிறு ஈரங்க நாடகம்

முன்னுரை

"கருதியவாறு ஆமோ கருமம்" என்னும் வினவிற்கு இச் சிறு நாடகம் தக்கவிடையொன்று ஆகும். நாம் விழைகின்ற கருமம் ஆகுமோ ஆகாதுபோமோ, நிச்சயமாய்ச்சொல்லல் இபலாது. கருதிய கருமங்கள் பலப்பல கைகூடுகின்றன. மனதூன்றிக் கருதியதனுற்றுன் அவைகைகூடினவோ, அல்லதுகைகூடநியமிக்கப் பட்டிருப்பவைகளைத்தான் நாம்மனதூன்றி முயல்கின்றேமோ, என்னும் இவ்வையம் மானததத்துவ சாஸ்திரிகளுக்கும் விதிவலியைக்கொண்டாடுபவர்களுக்கும் எக்காலமும் வழக்கை உண்டாக்கி நிற்கின்றது. அது எவ்வாறுயினும், கருதிய கருமம் கைகூடுமிடத்தும், கருதியவாறு ஆவதில்லை. ஒரு கருமம் நிறைவேறுவதற்குஎது நெறி என்று எண்ணி நாம் கைபிடித்துத் தொடருகின்றேமோ, அவ்வாற்றுல் அக் காரியம் ஆவது பெரும்பாலும் இவ்வுலக இயல்பன்று. ஆகாமற்போன விடத்தும் நாம் அஞ்சிய அவ்விடையூறே கெடுத்ததென்பதும் அரிதன்றே!

இந் நாடகத்தின் ஒற்றுமை நன்கு புலப்பட இச் சிறு விளக்கம் இங்குக் கூறலாயிற்று.

நாடக பாத்திரங்கள்.

சீனுவாசமூர்த்தி	...	சட்டக்கலாசாலை மாணுக்கன்.
கோதண்டராம ஐயர்	...	அவன் தந்தை.
மீனுக்ஷி	...	கோதண்டராம ஐயர் மனைவி.
விசாலம்	...	கோதண்டராம ஐயர் மகள்.
வெங்கடேசன்	...	கோதண்டராமஐயர் சமையற்காரன்.
திருநாவுக்கரசு	...	சீனுவாசமூர்த்தியின் நண்பன்.
சக்ரபாணி ஐயர்	...	பட்டணத்தில் வக்கீல்.
சுப்புலக்ஷ்மி	...	சக்ரபாணிஐயர் மனைவி.
ஜானகி	...	சக்ரபாணிஐயர் மகள்.
நாராயணன்	...	சுப்புலக்ஷ்மியின் உறவினன்.

ஒரு போலீஸ் உத்தியோகஸ்தன்.

முதல் அங்கம்

முதற் களம்

இடம்:—மதுரையில் ஒரு வீதி. காலம்:—முற்பகல்.

சக்ரபாணிஐயரும் நாராயணனும் கையில் கூஜா இரயில்பையுடன் வருகின்றனர். எதிர்முகமாய்ச் சீனுவாசமூர்த்தி தன் தோழன் திருநாவுக்கரசுடன் வருகின்றான்.

———

சீனு:—திருநாவுக்கரசு, சக்ரபாணிஐயர் ஏது இங்கே வந்து முளைத்தது! தெரியாதுனக்கு அவரை? பட்டணத்தில் வக்கீல்! ஒட்டைவண்டி ஒன்றிலே ஒழிந்தபோது கோர்ட்டிற்கு வரமாட்டாரா? லிங்க செட்டித் தெருவடா!

திரு:—ஆமாமாம்! தலைப்பாகைமாட்டி மாதிரி முளை முளையாய் எலும்பு தூக்கிக்கொண்டிருக்கும் ஒரு அழுக்குப்பிடித்த வெள்ளைக்குதிரை மூன்றுகால் பாய்ச்சலில் வருமே அந்த வண்டிதானே, மூர்த்தி?

சீனு:—நீ, ஆகா, நீதான் அந்த மிருகத்தை உபசாரமாய்க் குதிரை என்று அழைக்கின்றாய். தமிழ் நிரம்பப் படிக்கின்றாயே, இடக்கரடக்கலோ இது? 'குதிரை' என்று ஒரு சீட்டு எழுதி அதன் நெற்றியில் கட்டிவிடுவாரானால் அச்சிறு உதவி எவ்வளவோ பொதுஜன உபகாரமாயிருக்கும். சந்தேகத்திற்கு இடமான இவ்வுலகில் ஒன்றையாவது நிச்சயமாய்ச் சொல்லலாமே!

திரு:—அடெ அடெ! இந்த நொண்டிக் குதிரையை வர்ணிக்க இத்தனை நல்ல நடையா! குதிரைதான் கிழமோ வென்றால் வண்டிக்காரன் அதற்குமேல் தள்ளாதவன். இன்றைக்கோ நாளைக்கோ என்று இருக்கிறது அவன்பாடு.

சீனு:—வண்டிக்குள் வருகிற வக்கீல்வாள்பாடு மாத்திரம்! ஒருகூடைச் செங்கல்லும்பிடாரிதான்! கருமிப்பிணம். இரவெல்லாம் மூன்றாம் வகுப்பில் வந்து இருக்கிறது, கண்ணைப்பார். அதிகம் சம்பாதிக்காமல் போனாலும் ஏதோ கொஞ்சம் பணம் வைத்துக்கொண்டிருக்கின்றதே இது. பின், ஏன்தான் இவ்விதம் பஞ்சத்திலடிபட்ட பிரேதமாதிரி இருக்கவேண்டுமோ தெரியவில்லை! என்னடா, இப்படித் திரும்பிப் பார்க்கிறதே. காதுகேட்டுவிட்டதா, என்ன இழவு!

சக்ரபாணி ஐயரும் நாராயணனும் இவர்களுக்கு அருகே வருகிறார்கள்.

சக்ர:—ஏன் ஸார், நீங்கள் இந்த ஊர்தானே. இங்கே குட்ஷெட் தெரு எது ஸார். வெகுதூரமோ?

சீனு:—(ஒரு புறமாய்) நல்லவேளை தலைக்கு வந்தது தலைப்பாகையுடன் போயிற்றே! (சக்ரபாணி ஐயரைப் பார்த்து) அங்கே யார்வீடு தேடுகிறீர்கள்?

சக்ர:—உங்களுக்குத் தெரியுமோ என்னவோ? கோதண்டராம ஐயர் என்ற ரிடையர்ட் முன்சிப்......

திருநாவுக்கரசு சீனுவாஸமூர்த்தியின் கையைப்பிடித்து அமுக்குகிறான். சீனுவாஸமூர்த்தி திடீரென்று வலியால் கத்திவிடுகிறான்.

சக்ர:—என்ன! என்ன!

சீனு:—ஒன்றுமில்லை, சொல்லுங்கள்.

சக்ர:—ஒன்று மில்லையாவது! திடீரென்று எதற்காகக் கூப்பாடு போட்டீர்கள்.

திரு:—முள் ஏதாவது தைத்திருக்கும், வேறென்ன!

நாரா:—(ஒருபுறமாய்) ஏதேது! இந்த மதுரைப்பட்டணத்தில் நின்ற நிலையிலேயே முள் தைத்துவிடும் போல் இருக்கிறதே!

சக்ர:—ஏன் ஸார், நீங்கள் என்னபண்ணிக்கொண்டிருக்கிறீர்கள்? வடமாள்தானே?

சீனு:—ஏன், எதற்காகக் கேட்கிறீர்கள். நான் லாகாலேஜில் படிக்கிறேன். கௌசிக கோத்திரம்...மேலே.

சக்ர:—வாங்கள், உங்கள் ஜாகைக்குப் போகலாம்; உங்கள் தகப்பனாருடன் இது விஷயத்தில் கொஞ்சம் கலந்து பேசவேண்டும்.

சீனு:—எது விஷயத்தில்? லாகாலேஜ் விஷயமா? இல்லை, அந்தக் கௌசிககோத்திரத்திற்கு ஏதாவது கிராக்கியா? எதைப் பற்றிப் பேசப்போகிறீர்கள்?

சக்ர:—கிராக்கிதான் ஸார். விவாககாலமோ அல்லவோ? ஏன்? அவருடன் கலந்துபேச எனக்கு அனுமதி கொடுக்கின்றீர்களா?

சீனு:—எனக்கு ஆக்ஷேபணை இல்லை. ஆனால் இதே விஷயமாய்த்தான் நீங்கள் கோதண்டராம ஐயரைத் தேடி வந்திருக்கிறாப்போல் தோன்றுகிறது. முதலில் அவ்விடம் போங்கள். அங்கே சரிப்படாமற் போனால் பிறகு பார்த்துக்கொள்வோம். வேணுமென்றால் சாயந்திரம் மீனாக்ஷியம்மன் கோவிலிற்கு வந்தீர்களானால் சந்திப்போம்.

சக்ர:—சரி, ஞாபகம் இருக்கட்டும், மறக்கவேண்டாம். உங்கள் நாமதேயத்தைச் சொல்லவில்லையே.

சீனு:—சீனுவா.........சிவராமகிருஷ்ணன். எ. பி. சிவராமகிருஷ்ணன்.

சக்ர:—ரொம்ப சந்தோஷம். சாயந்திரம் ஐந்து மணி சுமாருக்குக் கோவிலிலே மறந்துவிடக்கூடாது.

(சக்ரபாணி ஐயரும் நாராயணனும் போகிறார்கள்.)

சீனு:—கோவிலிலும் மறக்கவில்லை, குளத்திலும் மறக்கவில்லை போங்கள்! நீங்கள்தான் கடைசியில் தேடிவந்த வீட்டின் அடையாளம் கேட்க மறந்துவிட்டீர். எங்கேபோய்த்திண்டாடுகிறீர்களோ பார்ப்போம்.

திரு:—அடே, அவர்தான் நீ அகப்பட்ட சந்தோஷத்தில் தன்னினைவு மறந்துபோய்விட்டார். இளித்த வாய் மூடவில்லை—கூடவந்து விழித்துக்கொண்டு நின்றதே ஒன்று, அது என்ன பண்ணிற்று. அதாவது ஞாபகப்படுத்தக்கூடாதோ!

சீனு:—'காலிலே செருப்பு இருக்கிறதா பார்' என்று கேட்ட குருவிற்கு 'நட்சத்திர மண்டலம் வரையில் தேடினேன் காணவில்லை' என்று சொன்னானே அல்லவோ ஒரு பரமானந்த சிஷ்யன், அவனுக்குநேர் முத்தண்ணாவாக்கும் இவன்.

திரு:—அப்படி நம்புவதற்கில்லை. அவன் விழிக்கிறதெல்லாம் பார்த்தால் முழுத்திருடன்போல் இருக்கிறது.

சீனு:—அது கிடக்கட்டும். என்னைப் பார்க்கிறவர்களெல்லாம் ஏனடா, எனக்குப் பெண்ணைக் கொடுக்கிறேனென்கிறார்கள்.

திரு:—நீ மன்மதக் குரங்கோ அல்லவோ! அதற்காகத்தான்—உன்னைப் பார்க்கின்றவர்களுக் கெல்லாம் நாக்கு ஊறுகின்றது. வேறென்ன! சரி போகிறாயா, போ, உனக்குமுன் உன் மாமனார் வீட்டிற்கு வந்திருப்பார். சாயந்திரம் நானும் கோவிலிற்கு வருகிறேன்.

அப்பர்

அப்பரும் அறுபத்துநான்கு கலைகளும்—29. தருக்கம்

[497-வது பக்கத் தொடர்ச்சி]

V சுரோத்திரம் (The Sense of hearing)—சத்தத் தோற்ற சாதன இந்திரியம் சுரோத்திரம். "அது முறுக்கைநிகர்த்த ஆகாயமே, வேறுபொருளன்று; 'சத்த குணத்துவத்தால்" என்பர். சத்தம்கிரஹிப்பது சுரோத்திரமாதலின் அது சத்தகுணமுடையது. சத்தம் அதாவது ஓசைப் பிரத்தியட்சத்திற்குச் சிறந்த காரணம் சுரோத்திரேந்திரியமாம். ஆங்கில தேசக்கூற்றுச் சாத்திரத்தில் அவ்விந்திரியம் மூன்று பகுதியுடையதென்பர். வெளிச்செவி, உட்செவி, மத்தியச்செவியென மூன்றாய்ப்பிரித்து, அவற்றின் இலக்கணம் கூறுவர். அவ்வாறு நம்மனோர் பகுக்கவில்லை. இவ்வைந்துஇந்திரிய உறுப்புக்களைப்பற்றி, அப்பர் கூறுவது காண்க:—

உன்னுருவிற் சுவையொளியூ றோசை நாற்றத்
  துறுப்பினது குறிப்பாகு மைவீர் நுங்கள்
மன்னுருவத் தியற்கைகளால் வைப்பீர்க்கையோ
  வையகமே போதாதே யானேல் வானோர்
பொன்னுருவைத் தென்னாரூர் மன்னு குன்றைப்
  புலிக்கெழிலாஞ்சிவக்கொழுந்தைப்புகுதென்சிந்தை
தன்னுருவைத் தந்தவனை யெந்தை தன்னைத்
  தலைப்படுவேன் துலைப்படுப்பான்தருகேன்மின்னே.

திருவாரூர் - திருத்தாண்டகம்-4.

இவ்விந்திரியங்களிலும் சுரோத்திரம்திருத்தப்படின் சிவநாதமே ஒருகீதமாய்ச் செவியில் திகழாநிற்கும்.

வேத னைமிகு வீணையில் மேவிய
கீத னைக்கிள ருந்நறுங் கொன்றைபம்
போத னைப்புனல் சூழ்ந்தபுத் தூரனை
நாத னைநினந் தென்மனம் நையுமே

திருவரிசிற்கரைப்புத்தூர்-திருக்குறுந்தொகை 4

VI. மனம்:—(Mind)

சுகாதியுபலத்தி (தோற்றச்) சாதன இந்திரியம் மனம். அது அணு பரிமாணம். இது சுக துக்கங்களின் பிரத்தியட்சத்திற்குச் சிறந்த காரணம். இது நித்தியத்திரவியங்களில் ஒன்று. இவ்விந்திரியம் உருவாதி யைந்தனுள் எக்குணத்தையும் சுதந்தரமா யறியுந் தன்மையுடையது.

மன விந்திரியத்திற்கு ஆன்மாவும் அதன் குணமாகிய சுகாதிகளும், அவ்வான்மாவின் சாதியும், அதன் சமவாயமும், அக்குணங்களின் ஜாதியும், அதன் சமவாயமும் பிரத்தியட்சமாம். ஏனைப் புறப்பொருள்கள் கிராண முதலிய இந்திரியங்கள் வாயிலாகப் பிரத்தியட்சமாம்.

மாட்டினேன் மனத்தை முன்னே
  மறுமையை யுணர மாட்டேன்
மூட்டிநான் முன்னை நாளே
  முதல்வனை வணங்க மாட்டேன்
பாட்டினைப் போல நின்று
  பற்றதாம் பாவந் தன்னை
ஈட்டினேன் களைய மாட்டே
  னென்செய்வான் றோன்றி னேனே.

குறைந்த திருநேரிசை - 3.

பொன்னுள் ளத்திரள் புன்சடை யின்புறம்
மின்னுள் ளத்திரள் வெண்பிறை யாயிறை
நின்னுள் ளத்துள் கொண்டிருள் நீக்குதல்
என்னுள் ளத்துள தெந்தை பிரானிரே!

மனத்தொகை - திருக்குறுந்தொகை - 1.

நெஞ்சினைத் தூய்மை செய்து
  நினைக்குமா நினைப்பி யாதே
வஞ்சமே செய்தி யாலோ
  வானவர் தலைவ னேநீ
மஞ்சடை சோலைத் தில்லை
  மல்குசிற் றம்ப லத்தே
அஞ்சொலாள் காண நின்று
  அழகநீ யாடு மாறே.

கோயில் - திருநேரிசை, பண் கொல்லி - 9.

(iv) அருத்தம் (Object of Word)

அருத்தமென்பது பதத்திற்குப் பொருளாய் நிற்பது. அது திரவியம், குணம், கருமம், சாமானியம், விசேடம், சமவாயம் என்னும் அறுவகைப்பகுதிகளுடையதாம். பதார்த்தம், அதாவது பதத்தின் அருத்தம், இருவகை. விதிமுகஞானத்தா லறியப்படுவதென்றும், நிஷேதமுகஞானத்தா லறியப்படுவது என்றும் இருவகை. விதிமுகஞானத்தா லறியப்படுவது யாது உண்டென்று அறியப்படுகின்றதோ அது. இதற்குப் பாவபதார்த்த மென்னும் நாமமுண்டு. நிஷேதமுகஞானத்தாலறியப்படுவது, யாது இல்லையென்று அறியப்படுகின்றதோ, அது. இது அபாவபதார்த்தமெனப்படும். பதார்த்தங்களைப் பற்பல பகுதிகளில் அப்பர், நின்ற திருத்தாண்டகத்தில் காட்டுகின்றார்.

சொல்லானைப் பொருளானைச் சுருதி யானைச்
  சுடராதி நெடுமாலுக் கருள்செய் தானை
அல்லானைப் பகலானை யரியான் றன்னை
  அடியார்கட் கெளியானை யரண்மூன் றெய்த
வில்லானைச் சரம்விசயற் கருள்செய் தானை
  வெங்கதிரோன் மாமுனிவர் விரும்பி யேத்தும்
நல்லானைத் தீயாடு நம்பன் றன்னை
  நாரையூர் நன்னகரிற் கண்டே னானே.

திருநாரையூர் - திருத்தாண்டகம் - 1.

அருத்த னையர வைத்தலை நாகத்தைத்
திருத்த னைத்திரு வண்ணா மலையனைக்
கருத்த னைக்கடி யார்புர மூன்றெய்த
அருத்த னையடி யேன்மறந் துய்வனோ.

திருவண்ணாமலை - திருக்குறுந்தொகை - 9.

இனி, பதார்த்தங்களை முறையே ஆராய்வோம்.

199140

பொதிகை நிகண்டு

[பொதிகை நிகண்டு, கல்லிடைநகரிலிருந்த சாமிகவிராயரால் இயற்றப்பெற்றது. இவர் நாமதீப நிகண்டின் ஆசிரியராகிய சிவசுப்பிரமணியக் கவிராயரின் தந்தையா ராவர். இந்நிகண்டு முழுமையும் அந்தாதித் தொடையிலமைந்த விருத்தப்பாக்களால் இயன்றது. எனவே, கற்போர் எளிதில் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுதற்குப் பெரிதும் இது ஏற்புடையதாயுள்ளமை நோக்கத்தக்கது. திவாகரமாதிய பல கருவிநூல்களையும் செவ்விதின் ஆராய்ந்து இயற்றப்பெற்றது; ஏனைய நிகண்டுகளிற் காணப்பெறுதனவும் பிற்காலத்துவழக்கிற் புகுந்துள்ளனவுமாகிய சொற்கள்பல இந்நிகண்டில் தரப்பட்டுள்ளன. ஆதலால் இது தமிழ்மக்களால் நன்கு போற்றப்பெறுதற்குரிய சிறந்த நிகண்டுநூலாகும். இப்போதுதான் முதன்முறை இந்நூல் பதிப்பிக்கப்பெற்று வெளிவருகின்றது. இப்பதிப்பிற்கு ஆழ்வார்குறிச்சி ஸ்ரீமான் எம். பி. எஸ் துரைசாமி முதலியாரவர்கள் உதவிய குறைப்பிரதிகள் இரண்டும், திருவனந்தபுரம் கலாசாலையில் தமிழ் லெக்சரராயிருக்கும் ஸ்ரீமான் பன்னிருகைப் பெருமாள் முதலியாரவர்கள் அனுப்பியுதவிய பிரதியொன்றும் ஆதாரமாக வுள்ளன. கலாநிலயப் பத்திரிகையில் இந் நிகண்டினை வெளியிடுதற்கிணங்கிய பத்திராசிரியரவர்களுக்கு எனது நன்றி யுரிமை யாகின்றது.] S. வையாபுரிப் பிள்ளை.

காப்பு

பொன்பூத்த வெள்ளிப் பொருப்பனும ஞேன்மணியு
முன்பூத்த வேழ முகத்தானே - யின்பூத்த
பூவணியல் போலப் பொதிகைநிகண் டைப்பாடப்
பாவணிய லீய்ந்துகாப் பான்.

சிறப்புப் பாயிரம்

பூமாது புவிமாது போற்றுமுமை மாதும் [தோன்
பொன்மலைவில் லியுமீன்ற கைம்மலையின் னுதித்
மாமாது குறமாது மணவாளன் செந்தூர்
வடிவேல னடிமலரை மனத்திடத்து னினைத்தே
கோமாது விரிந்தனைய பலநிகண்டும் பார்த்துக்
கும்பன்மகிழ் பொதிகைநிகண் டென்றொருநூல்
நாமாது புகழ்பொருனை நதிசூழ்கல் லிடையூர் [பகர்ந்தான்
நதிகுலன் சுவாமிகவி ராசசங்க நிதியே.

I. தெய்வப் பெயர்த் தொகுதி.

சங்கர னுமாபதி பிரானம்பன் யோகி
சயம்பிறை சதாசிவன்கங் காளன்மா னேந்தி
அங்கணன்பே யோடாடி சருவஞ்ஞன் ஞானி
யமலனர னீலகண்டன் பித்தனித்தன் சோதி
மங்கைபங்கன் சம்புமகே சன்வாம தேவன்
மாதேவ னிமலன்விடை யோன்கொன்றை சூடி
கங்கையணி வோன்பரசு தரனுதி கிரியன்
காலகா லன்கயிலை யாளிதிகம் பரனே. (க)

பரமனரி யான்றுணு நந்திபுலித் தோலான்
பாண்டரங்க னக்கனுருத் திரன்மூர்த்தி யீசன்
சிரதரன்பிஞ் ஞகன்காம தகனனழ லேந்தி
சித்தனனு பமன்சூல னசஞ்சலன்க பர்த்தி
யரவனீ சானனழ லாடியண்ணல் பெருயா
னந்திவண்ணன் கண்ணுதலைம் முகன்பூத நாதன்
வரனனகன் புனிதன்முகுந் தாபங்கன் பகவன்
மத்தனத்தன் றத்துவா தீதன்மறை முதலே. (உ)

முதல்வனீ சுரனடனன் சிற்பரன்க பாலி
முக்கணன் புராரிசிம்பு ளாயிஞெ னனந்தன்
மதகரியை யுரித்தவன்பெம் மானீமத் தாடி
வயிரவன்பி ஞகியா லமர்கடவுள் சடையோன்
சுதன்போச னன்பிச்சா டனன்விமலன் மெய்யன்
றம்புருகா தன்சாம தாற்பரியன் புயங்கன் [லான்
விதுவணிவோ னெண்குணனெண் டோளன்மலை வில்
வெண்ணீற்றன் பசுபதிநாற் றென்றுசிவன் பெயரே.

சிவையிமைய வல்லிபரை யந்தரிப வானி
தேவியுல காயிசத்தி காமக்கோட் டத்தி
கவுரியறம் வளர்த்தசெல்வி சுந்தரியீச் சுரிபூங்
கணைக்கிழத்தி யருளேழை சாம்பவிதாய் வாலை
புவனைதிரி புரைவாமி யபிராமி யன்னை
பூரணியா ரியையமலை யீசனிட்ட பூரகி
தவசதா னந்திமா தாநாரி யையை
சங்கரியம் பிகையுமைபார்ப் பதியையேழ் காணே. (ச)

காளிகாத் தியைபாலைக் கிழத்திபண் ணைம் பணத்தி
கன்னிநா மினிவிமலை பஞ்சமிமா தங்கி
யாளியூர் பவள்சவுரி பகவதிவாட் கையா
ளாயிகலை யூர்தியயி ராணியா மளைவே
தாளிபயி ரவிமாரி சூலிசக்ர பாணி
சாமுண்டி நீலிதுர்க்கை சண்டிகைகொற் றவையெண்
டோளிவிந்தை கங்கைநா ரணிவீரி யோகி
சூரிமயி டாரிதா ருகவிநா சனியே. (ரு)

சமரிசெயை கங்காளி மாலினிய கோரி
தமருகியந் தரிவிசையை சுந்தரிமுக் கண்ணி
யமரியர ஞேடாடி காமிநெடுங் காத்திரி
யையையகோ மளைமாயை மதுபதிக பாலி
குமரியல கைக்கொடியாள் வல்லணங்கா ரணிமா
கோரியறு பதுங்காளி துர்க்கைபொதுப் பேரா
மிமைவல்லை வஞ்சனிசூர் மாயவள்சண் டனியோ
டிடாகினி சாகினிசன்மினி யோகினியா கினவே. (சு)

* ஆகுவா கனிலம்போ தரன்சூற்ப கன்ன
ஞானமுகன் கணபதிமுக் கண்ணன்விக்கி னேசன்
ஏகதந்த னைங்கரன்பா சாங்குசன்க யாரி
யேரம்பன் வக்கிரதுண் டன்விநா யகன்பேர்
வேகமிகு முக்கிரன்செந் நிறன்சிம்பு ளாஞேன்
வில்லிகட்க தரன்சடையன் சிறுவிதி மகாரி
மோகமுயர் பத்திரைக்கு நாயகன்கு ரோதன்
முக்கணன்பத் தாம்வீர பத்திரன்பேர் மொழியே. (எ)

மொழிபுலவன் வேலன்சேய் குகனமரர் தளவாய்
முருகன்காங் கேயன்வேள் சூர்ப்பகைம யூரன்
குழகன்மான் மருகன்கார்த் திகைமகன்வி சாகன்
குமரனு நிருகரன்சண் முகன்சடாக் கரத்தான்
அழகன்சே வலங்கொடியோன் கடம்பன்வெற்பன்சுவாமி
யமணழித்தான் குறிஞ்சிமன்கற் பகவெறிந்தோன் சேந்
எழிலிளையன் செட்டிவள்ளி தெய்வானை கேள்வன் [தன்
ஈசன்மகன் சரவணப வன்கந்தன் பேரே. (அ)

பேருலகி லாறுதலத் திறைவனுமை சிறுவன்
பேசுருத்தி ராயுதத்தா ஞரதசி னேகன்
தாருகசம் காரியவு ணரைக்†கடிந்தோன் குரவன்
சங்கரா சாரிதிருப் புகழன்வெறி யாட்டான்
சிறுதகீ ரனைக்காத்தோ னருணகிரிக் கருள்வோன்
செங்கிடா யூர்தியயற் சிறைபுரிந்து விடுத்தோன்

* ஆகுவாகனன் மூத்தோ னைங்கரன் விக்னேசன்
அரன்மகன் விநாயகன் பாசாங்குசன் முக்கண்ணன்
ஏகதந்த ஞானமுகன் கயமுக சங்கார
னேரம்பன் குமரன் முன்ஞேன்கணபதிக் கீரேழ்பேர் (பி - ம்)

† கடந்தோன் (பி-ம்)

மேருவசைத் தோனிலக்கத் தொன்பதின்மர் முன்ஞேன்
‡ வேடனென்றே டைம்பதுஞ்சுப் பிரமணியற் காமே.

ஆனைவா கனன்முடுவ லாளியா ரியஞே
டரிகரபுத் திரன்புறங்காப் பானற்ப சனந்தன்
காணுறுகுத் திரதேவன் சாதவா கனத்தான்
கடல்வண்ணன் காரிதவ ளக்கண்ணன் பூதன்
ஏனையகோ ழிக்கொடியோன் பூரணைபுட் கலைசே
ரிறையோகி தண்டதர னறங்காப்பான் கையன்
பானலணி வான்சாத்தன் வனமூர்த்தி நீண்டோன்
பரியூர்தி யையன்பே ரிருபான்முத் தொகையே. (கo)

முத்தன்கேத் திரபாலன் சட்டையன்க பாலன்
முடுவற்சே னையன்வடுக னிருவாணி காரி
சித்தன்கா லனையூர்ந்தோன் றமிழ்க்கிழவன் குமரன்
திரிசூலன் கருங்குதிரை யாளிபிள்ளை நக்கன்
வித்தகன்ஞா ளியையூர்தி வயிரவன்பத் தொன்பான்
விளங்குபெய ராம்வடுகன் றுய்வடுகி மோடி
$ குத்திரிவெங் காடுகொள் மாரியொடு ¶ கொற்றி
கொடியையமு தணங்குபெய் ரெட்டெனவிண் டனரே.

விண்டரியச் சுதன்கண்ணன் கரியவன்கோ பாலன்
விட்டுணுநா ரணன்வாசு தேவன்கா குத்தன்
கொண்டல்வண்ணன் கருடகே தனன்கருடா ரூடன்
கோவிந்தன் மால்மதுசூ தனனனந்த சயனன்
வண்டுருவ ஞரசிங்கன் வாமனன்மு ராரி
மாயனெடி யோன்றிரிவிக் கிரமன்வன மாலி
தண்டனுபேந் திரன்பகவன் சங்குசக்ர பாணி
சம்புபிரான் படியிடந்தோ னூர்திபூத் தோனே (கஉ)

பூவளந்தா னவநீத சோரனிரை மேய்த்தோன்
பூமகள்கோன் றிருமார்ப னுலகுண்டோன் வலவன்
காவலன்று மோதரன்மா தவன்வாம னேமி
காளிகா மர்த்தனன்கே சவன்சார்ங்க பாணி
தேவகிசேய் மதன்றந்தை யயன்றந்தை முகுந்தன்
சிதரன்ச னுர்த்தனன்பேய் முலையுண்டோ னனந்தன்
கோவலன்ரா கவன்ராமன் கடற்றுயின்றே ஞயன்
குவடெடுத்தோன் கடலையடைத் தான்புருடோத்
தமனே. (கங)

தமன்விசைய சாரதிபத் தவதார ஞதி
சகடுதைத்தா னைம்படையான் பாண்டவர்ச காயன்
உமைதுணைவன் பின்னைமன்பீ தாம்பரன்வ ராகன்
உயர்பதும நாபனறி துயிலனந்த பாலன்
கமலலோ சனன்றுச ரதிபெருமா ளெண்பான்
காமபா லன்பலபத் திரன்முசலி வெள்ளை
யமர்நீலாம் பரஞேர்குண் டலனிரே பதிம
னனந்தனலா யுதன்பனந்தா மன்பலதே வனுக்கே.

தேவர்முது வோன்ஞானி வரன்சதா னந்தன்
றிசைமுகன்மா லுந்திவந்தோன் றூதாவி தாதா
மேவுமெண்க ணேன்வேதன் பரமேட்டி குரவன்
விரிஞ்சனிர ணியகெற்ப னயனன்ன மூர்தி
தாவில்படைப் போன்விதிமண் பொதுத்தந்தை சூதன்
* சம்புகம்மந் தனன்கமல யோனிபிதாப் பகவன்
பூவிருந்தோ னனக்கொடியோன் கலைமகண்ம ணாளன்
போதனிறை சதன்பிதா மகன்பிரமன் பெயரே. (கரு)

பெயர்பெறுபொன் பொறிவிமலை மாவாக்க மிளையாள்
பெருந்திருப்பூ மான்சலசை கமலையரிப் பிரியை
பயவுததி மகள்விந்தை யிந்திரைதாக் கணங்கு
பதுமைசீ தேவிசெய்யாள் செல்வியிலக் குமிபேர்
நயவாணி பாரதிபா மகள்வாக்கி கலைமான்
ஞானிபுரா தனியுலக மாதாவெண் கமலை
† சயபனுவ லாள்பூர வாகனிகா யத்ரி
‡ சாவித்தி ரியிசைமான் பிராமிநா மானே. (கசு)

‡ வேடனுட னைம்பதுஞ் (பி-ம்) $கொற்றிபெருங்(பி-ம்)
¶ சூரி (பி-ம்) * சம்பிறையந் (பி-ம்) † சுபபனுவ (பி-ம்)
‡ சொற்சாவித்திரி (பி-ம்)

மானதன்வே ளிரதிநண்ப னுருவிலிம ஞேபு
மாரன்மது சகன்சம்ப ராரிதென்றற் றேரோன்
வேனிலான் மதனழகன் மோகன்வில்லி மால்சேய்
மீன்கொடியோன்மதிக்குடையோன் பெண்படையோ
ஆனமஞே சன்கரும்ப னங்கசன்கந் தற்பன் [ன்வசந்தன்
அனங்கன்பூ மகன்சேய்சித் தசன்பஞ்ச பாணன்
$ கானிறைபூ வாளிகிளிப் பரியனிருட் களிற்றேன்
கடன்முரசன் காமன்மஞே பவன்மதனன் பேரே.

மதத்தசுர வயிரியரி மருத்துவன்கோ சிகன்மால்
வச்ரதரன் புருகூதன் போகிமுகி லூர்தி
சதக்கிருது புரந்தரன்வா சவன்மகவான் புலவன் [தன்
சக்கரன்பொன் னகர்க்கிறையா யிரங்கண்ணன் வேந்
னதுச்ச பன்கோ பதிகாரி வேள்விமன்னன் கரியோ
னமரர்கோன் சசிகேள்வன் மருதநிலத் ததிபன்
கதிப்புரோ கிதன்பாக சாதனன்வ லாரி
காமனயி ராபதனுச் சிரவாவுக் கிறையே. (கஅ)

¶ இறையாகண் டலன்சம்ப ராரிபஞ்ச நிதியோன்
இந்திரன்சு நாசிதே வேந்த்ரன்முப்பா னெண்பேர்
அறைசசிபு லோமிசைசுந் தரியிந்தி ராணி
யயிராணி பேராகு மரம்பைதிலோத் தமையோ
டுறுவசிமே னகைசசியும் பஞ்சவே லையராம்
உயர்தருச்சங் குடன்பதுமஞ் சுரபிசிந்தா மணியுங்
குறைவிலைந்து நிதிமகவா னேவல்கேட் பதுவாங் [ரே.
தொண்டவிண்ணுட்டிறைகொடிதானிடியெனப்பேசுவ

சுவற்க ரும்பர் விபுதருயர் நிலையர்வரர் வானோர்
சுரரமரர் கடவுளர்புத் தேளிரையர் மெய்யர்
தவத்தரண்ட ரமுதர்விண்ணோர் மேலோரா தித்தர்
தானவர்பண் ணவர்பகவ ரதிதிசுதர் தீர்த்தர்
அவிப்புலவர் புங்கவர்பட் டாரகரி லேகர்
ஆத்தரிமை யோரவுண ரியர்தேவர் முப்பா
னவக்கடவுள் இயவுள்புத்தேள் சூரணங்கு தேவு
நல்லதெய்வந் தேவதமெட் டென்பர்பொதுப் பேரே.

பொதுநாமந் தெய்வமின்னோர் தமக்கணங்குஞ் சூரும்
புத்தேளிர் பெண்கள்பெய ராமகளி ராகு
* முதியள்கெட லணங்குதவ்வை கலதிசீ கேடி
முகடிகொடித் துவசிகர வாகிசேட் டையின்பேர்
மதிதடினி துனிவிமலை திரிபதகை கங்கை
வரநதிநீ பவதிமந்தா கினிபகீ ரதிவா
னதிசனுவி யுந்திசிந்து தீர்த்திகைநீர் மடந்தை
நளினிசகத் திரமுகிதுய் தாக்கியா பகையே (உக)

பகுமரக்கர் தயித்தியர்தண் டாரவுண ரசுரர்
பண்ணவர்மாற் றார்நிருதர் திதிமைந்தர் யாதர்
தகுவர்நிசி சரர்பிசிதா சனர்வக்ர தந்தர்
தானவரி ராக்கதர்மெய் காப்போர் கார்வண்ணர்
மிகுகடங்க டாமிராக்† கதரசுரர் பொதுப்பேர்
விஞ்சையர்கோ சரர்சேடி யோருடன் சேணியருங்
ககனவித்தி யாதரர்பேர் கந்திருவர் யாழோர்
காந்திருவர் கிம்புருடர் கின்னரராம் பாரே. (உஉ)

பாரிடஞ்சா தகஞ்சாதங் கிருத்திமமே கூளி
பலிகவரும் குறளாறும் பூதப்பே ராகும்
சூரலகை கணமண்ணை கூளிவெறி பாசஞ்
சோகுமயல் கடியழன்பி ரேதம் வேதாளஞ்
சாரிணங்கன் கழுதுகுண பாசிசவங் குணபஞ்
சாவுநிசி சரம்வெள்ளை யீமசம் பசாசு
கூருமருள் வியந்தரம்வெங் கால்கிரகஞ் சங்கை
குணங்குபிண மறிவிலிமுப் பானென்றும் பேயே.

$ கானுறுபூ (பி-ம்) ¶இறைசயந் தன்றந்தை சம்ப(வி-ம்)
* முதுசேட்டை சிறப்பில்லாள் கலதி சீகேடி
முகடிகெட லணங்குதவ்வை கேட்டைதிரு மூத்தாள்
மதியேக வேணிகாக்கைக் கொடியாள் கழுதை
வாகனி மூதேவிபேர் திரிபதகை கங்கை
சதிவிமலை பகிரதி மந்தாகினி நீபவதி
சனுவி நதிசகத்திரமுகி தீர்த்திகையா பகையே (பி-ம்)
† கதரவுணர் (பி-ம்)

பானுவழ லங்கியெரி தழல்கனலி தபனன்
பாவகனங் காரகன்றீ வசுத்தூம கேது
தீனிசுடர் தகனனனல் ஞெகிழிசித்ர பானு
சிகிதேயு வாரலரி சோதிதென்கீழ்த் திசையோன்
ஆனதனஞ் செயன்சுபலன் சுசிசாத வேதா
வழனம்வன்னி மூளரிகனல் பகவன்வா யுசகன்
ஊனெழுநாக் கொல்லியச மூர்த்தியுதா சனனே
புதிரனெருப் பக்கினிகாற் பானென்றுய்க் காட்டே.

காட்டழல்கா வகந்தாவ மாகும்பா வகன்றீக்
கடவுளாங் கடையனலுத் தரமடங்கல் வடவை
மூட்டெவட வாக்கினியூ ழித்தீயா மனையார்
மூள்சுதைசு வாகாவாஞ் சுவாலைதீ நடையாம்
ஆட்டுபொறி புலிங்கமா முற்கைதீக் கொள்ளி
யரணிஞெலி தீக்கடைகோல் புகைகுய்வு வெடிகும்
பூட்டரிதா ளிப்பாவி கறைதூம மொன்பான்
புகையுறையொட் டுறைகிரா லம்பனமூன் றரிதே.

பெனிடிக்ட் டி ஸ்பைனோஸா

[471-வது பக்கத் தொடர்ச்சி]

3. சித்தாந்தங்கள்

கைவல்லியம்.

புலச்சீர்மையும் மனவமைதியும் நிர்மல அறிவும்பூரண அநுபவமும் நிரம்பி, உள்ளமுவந்து கருமமியற்றிவரும் தீரனே ஞானி எனவும், நித்தியமாயும் நின்மலமாயும் நிஷ்களங்கமாயும் நிராமயமாயும் நிறைவாயும் எல்லாம் வைத்திருந்த தாரகமாயும் போதமாயும் சஞ்சலரகிதமாயும் நிர்த்தொந்தமாயும் ஆனந்தமயமாயும் மனவாக்குக்களுக் கெட்டாச் சித்துருவாயும் ஏகமாயும் உள்ளது கடவுள் அல்லது மூலவஸ்து எனவும், மேற் சொல்லியிருக்கின்றோம். பாசங்களை வென்று, அகங்கார மமகாரங்களற்று, உலகாதிகளின் பந்தத்தினின்று விடுபெற்ற ஞானி அம் மூலப்பொருளை யடைந்து சதானந்தத்தில் மூழ்கித் திளைப்பான்; கடவுளைப்போல் நிரந்தரனாய் நித்தியனாய் விளங்குவான்: இதுவே கைவல்லிய மென்பது (Beatitude)-நிரதிசய வின்பம்-அந்தமில்லாத ஆனந்தம்-வீடுபேறு (Blessedness) எனப்படுவது. இது புனிதமாகியவோர் அறந்தங்கியவாழ்க்கையின் பரிசு(reward) அல்லது பலனன்று; ஆனால், அந்நிலையே தூரிய வாழ்க்கையாவது. ஆசாபாசங்களையடக்கி ஆள்வதினின்றுவீடுபேறு பெற்று இன்புறுவதன்று; ஆனால், போனந்தத்தில் மூழ்கி அகம் பூரிப்பதால் ஆசாபாசங்களைக் கட்டியடக்கத் தீர்மானித்துக் கடைசியில் ஜயிக்கின்றோம். "சயத்வத்தை அறிந்த, முழுமுதற் பொருள் தன்னுள் அந்தர்யாமியாயிருந்து இயக்குவதை உணர்ந்த ஆன்மா வீண் மனோராஜ்பங்களை நிருமிப்பதிலும், நிஷ்பிரயோஜனக் கோட்களைப் பின்னுவதிலுமே காலம்போக்காது, மெய்ந்நெறிபற்றி, சத்கர்மங்களிலீடுபட்டுச் செய்தலே முழுமுதற் கடமையெனக் கருதி, ஏகதியானத்துடனும், அஞ்சாத நெஞ்சத்துடனும் தளராவூக்கத்துடனும் செய்துவரும். சுசீலர் ஏற்றுச்செய்யுங் கருமங்களெல்லாம் பிறர்நலத்திற்காகவே செய்யப்படுவனபோலும். சத்தைப்பற்றிச் சதாகாலமும் தியானிக்கும் ஆன்மா அச்சத்தாக மாறிவிடும். உயரிய ஆன்மா பரம்பொருளில் ஒன்றி மறைந்துவிடுவதாக மேற்சொல்லியவற்றிலிருந்து முடிக்கக் கூடாது. அகராதியின் பக்கங்களை நிரப்பிநிற்கும் சொற்கள் உயர்ந்த காவியங்களில் எவ்வாறு சிறந்து பொலிவுற்று விளங்குகின்றனவோ, சொற்களின் வீரியம் எவ்வாறு பெரும் பிரசங்கங்களின் வீரமொழியில் விளங்குகின்றதோ, அவ்வாறே அச்சீரியர்கள் உலகாதிகளுக்கு மேலுயர்ந்து, நித்தியர்களாய்ப் பிரகாசிக்கின்றனர்.

"சத் அறிவு அல்லது ஈச்வரஞானம் நிரம்பிய புண்ணியபுருஷன் பயம் பச்சாதாபம் ஆவல்களால் பீடிக்கப்படான். அசையாப் பாறைகள்மீது வெகு உக்கிரத்துடன் பேரலைகள் மோதி யடிக்கவே சுவ்வாறு உக்கிரங் குறைந்து அவ்வலைகள் சிதறப்பட்டு மீளுகின்றனவோ, அவ்வாறே துக்கமும் வலியும் வருத்தமும் இன்னு மிவைபோன்ற ஏனைய பிரேமைகளும் மும்முரித்து எழுந்து அஞ்சாவீரம் படைத்த ஞானியைக் கடுவிசையுடன் தாக்கித் தாமாகவே வலிமையற்று அடங்குகின்றன. அலைகள் திரும்பிப்போனபின் விண்ணில் பிரகாசிக்கும் கதிரவனை அப்பாறைகள் பழையபடி நோக்குதல்போல், அக் கொடும் பிரேமைகள் அடங்கியவுடன் ஞானியானவன் புன்சிரிப்புற்று மீண்டும் கடவுள்தியானத்தில் ஆழ்கின்றான். துக்கித்தற்காவது, களித்தற்காவது ஞானி இருந்துவருவதில்லை; ஆனால், உலகாதிகளின் தன்மைகளையும் போக்குக்களையும் சாந்தத்துடனும் தைரியத்துடனும் உற்றுப்பார்த்து வருவான்"

"சத்தை அறிதலே நித்யத்வமாகும். நான் என்ற அகப்பற்றை ஒழிக்கவே, அவ்வறிவு ஊறிப் பெருகும். உலகைத் தன்னிலும், தன்னை உலகிலும் காண்பதே பந்தவிமோசனத்திற்கான உபாயம். அகண்டிதமாய் நிர்த்தொந்தமாய் விளங்குதலே அழியாநிலை என்பது."

அறவாழ்க்கையின் ஆரம்பம். குணநிசயம் வளர்ச்சி முதலானவைகளைப்பற்றிய இவருடைய கொள்கைகளிற் சிலவற்றை இனி அறிவிப்போம்.

நன்மைபயப்பவைகளையும், வாணாளைச் சுலபமாகச் செலுத்தற்கு அநுகூலமானவைகளையும், வாழ்க்கை மாண்பை நிலைக்கச்செய்யக்கூடியவைகளையும் தேடிப் பெற்று அநுபவித்தல் விவேக வழியாகும்.

சுயகுணத்தை யொட்டி யொழுகுதலே அறம் என்பதினின்றும், நீடித்தவாழ்வை வாழ விரும்பி அகப்போக்கை யநுசரித்து இன்புறவே ஒவ்வொருவனும் பெருமுயற்சி செய்கிறா னென்பதினின்றும் நாம் கவனித்தறியவேண்டிய விஷயங்களாவன:—சுக வாழ்க்கையை ஸ்திரப்படுத்தும்பொருட்டுப் பெரிதும் முயற்சித்தலே அறம்; உள்ளக்கருத்து, அதாவது நீடித்து நிலைத்த வாழ்க்கை கைகூடிவரப்பெறுவோம் என்ற நம்பிக்கையினின் றுண்டாகும் உணர்ச்சியே இன்பம்: அதினிமித்தமேதான் அறவாழ்க்கை விரும்பிச் செலுத்தப்படவேண்டும்; அதைவிட மிக்க உபயோகமுள்ள, அல்லது அதற்கும் மேலான சாதனம், யாதொன்றுமில்லை: தற்கொலை செய்து மரிப்பவர்கள் மனத்திண்மையற்றவர்கள்; தன் இயற்கைக்கு முரணான புறவிஷயாதிகளால் எதிர்த்துக் கலக்கியடக்கப்படும் பேதைகள்—என்பனவாம்.

ஜூலியஸ் ஸீஸர்

[ஓர் ஷேக்ஸ்பியர் நாடகம்]

[488-வது பக்கத் தொடர்ச்சி]

அங்கம் 4. களம் 1.

இடம்:—உரோமாபுரி, ஆண்டனியின் மனையின்கண் ஓர் அறை. ஆண்டனியும் ஆக்டேவியஸ் ஸீஸரும் லெபிடியஸ்ஸூம் ஓர் மேசையண்டை உட்கார்ந்திருக்கின்றனர்.

ஆண்டனி:—இவர்கள் இத்தனைபேர் இறக்கவேண்டுமன்றோ; அவர்களுடைய பெயர்களுக்கெதிரே குறியிட்டாய்விட்டது. (1)

ஆக்டேவியஸ்:—உன் சகோதரனும் சாகவேண்டும்; சம்மதமோ, லெபிடியஸ்? (2)

லெபிடியஸ்:—நான் சம்மதிக்கின்றேன். (3)

ஆக்டேவியஸ்:—அவனையுங் குறித்துக்கொள், ஆண்டனி.

லெபிடியஸ்:—பப்லியஸையும் உயிருடன்விடலாகாது என்ற நிபந்தனையின்மேல்—அவன் உன் தங்கை மகன், மார்க் ஆண்டனி. (4)

ஆண்டனி:—அவன் பிழைக்கவேண்டா. பார், புள்ளியொன்றினால் அவனை ஒழிக்கின்றேன். (5) நல்லது, லெபிடியஸ், நீ ஸீஸரின் வீட்டிற்குப் போய், மரணசாஸனத்தைக் கொண்டுவா; கொடைகளிற் சிலவற்றை எவ்வாறு குறைப்பதென்பதை நிச்சயிப்போம். (6)

லெபிடியஸ்:—நான் வரும்வரையில் இவ்விடத்திலேயே இருப்பாயோ?

ஆண்டனி:—இங்கேயாவது, நகரச்சபை மண்டபத்திலாவது.

[லெபிடியஸ் போகின்றான்]

குற்றேவல்மீது ஓட்டிவிடுவதற்கே ஏற்றவோர் அற்பச் சிறுமனிதன் இவன். மூன்றுகூறு இவ்வுலகத்தை இட்டக்கால், பங்கிற்கு மூவரில் ஒருவனாய் இவன் நிற்பது முறைமையோ? (7)

ஆக்டேவியஸ்:—அன்னவனென்றே எண்ணி நீ, கரிய நம் தண்டனைச் சீட்டில் கொலைக்குறியிட்டொழித்தற்குரியார் யாவரென்று தேர்வதில் அவன் குரலினைக் கொண்டனை. (8)

ஆண்டனி:—ஆக்டேவியஸ், நின்னினும் அதிகநாள் கண்டுளேன்யான். வசையுடைச் சில பொதிகளை நீங்கி நாம் ஆறுமாறு, இந்தப் பெருமைகளை இம்மனிதன்மீது வைக்கின்றோமாயினும், கழுதை யொன்று பொன்னைச் சுமப்பதுபோன்றே இவனும் அவைகளைச் சுமக்கலாவான். நாம் குறித்த நெறிவழி நடத்தியும் தூரத்தியும் இக்கருமத்தில் மறுகிவியர்த்தற் குரியானவன். நமது நிதியினை நாம் வேண்டுமிடத்திற்குக் கொணர்ந்து சேர்த்தபின், பொதியைநாம் இறக்கிக்கொண்டு, வெறுங்கழுதையைப் போன்றே காதுகளை நெளித்துக் குலுக்கிப் புறம்போக்கில் மேய்வதற்கு அவனை அனுப்பிவிடுவோம் (9)

ஆக்டேவியஸ்:—உன் சித்தம்போல் செய்யலாம் நீ; எனினும், சோதனைகளில் தேர்ந்துநிற்கும் ஆற்றலுடைய போர்வீரன் அவன் (10).

இதன்மேல் நிகழ்வதை இந்நாடகத்தின் இரண்டாம் பாகம் என்னலாம். ஸீஸர் இனிக் களத்திலில்லை. அவனைக் கொன்ற பழிகாரர் ஒருபுறம். அப்பழியைத்தீர்க்கின்றோமென்று புறப்பட்டவர் மறுபுறம். ஸீஸர் மூழுமூர்க்கனாயிருப்பதால் அவனைக்கொன்று ஜனங்களை அவன் கொடுமையினின்று காக்கின்றோம் என்னக் கங்கணங் கட்டிக்கொண்டு புறப்பட்டவர்போல் ப்ரூட்டஸ் முதலியவர் விவகரித்தனர்.

இவர், ஸீஸரைக்கொன்று அப்பதவியைத் தாம் கைப்பற்றுதற்கே அவாவிய வஞ்சகக் கள்வரென்றும், ஸீஸரை இவர் கொன்றபழியைத் தான் தீர்ப்பதாகவும் ஆண்டனி விளம்பி விவகரிக்கத் தலைப்பட்டான். பார்க்குமிடத்து இறுதியில் இவ்விரு திறத்தோரில் ஒருவருக்கும் உள்ளந் தூய்மையில்லை. "அவன்கெட்டான் சண்டாளன் நான்செய்யும் பாதகத்தைப்பார்" என்று ஒருவரையொருவர் விஞ்சமுயல்வதுபோலிருக்கின்றதிது. பழிவாங்கும் கட்சியினராய்ச் சேர்ந்த, ஆண்டனியும் ஆக்டேவியஸ்ஸீஸரும் லெபிடியஸூம் இந்தக்களத்தில் பேசிக்கொள்கின்ற வகையிலிருந்தே இவர்களும் எத்துணை பழிகாரர்களென்பது தெரியவரும்.

(1) இக்களம்திறப்பதற்கு முன்னரே இவர் பேசிக்கொண்டிருந்ததைத் தொடர்ந்துரைத்தது இது. முதலில், ஸீஸரைக் கொன்றதற்குக் காரணமாயிருந்தவர் என்ற குற்றமேற்றி எவ்வெவரைத் தாம் கொன்றொழிக்க வேண்டுமென்பதை இம்மூவரும் தீர்மானஞ் செய்கின்றனர். அவர்களுடைய பெயரையெல்லாம் ஒரு பட்டியில் எழுதி, மூன்று பேரும் ஆலோசனைசெய்து இவ்விவரைக் கொல்வதென்று அவரவர் பெயரிற்கு நேரே குறியிடுகின்றனர்.

(2), (3) அவ்வாறு குறியிடவேண்டியவர்களில் ஒருவன் லெபிடியஸின் ஸகோதரன். அதற்கும் சம்மதம என்கின்றான் லெபிடியஸ்.

(4) முதலில் சம்மதம் என்ற லெபிடியஸ், ஆண்டனியின் மருகனாகிய பப்லியஸை உயிர்வாங்குவதற்கு ஆண்டனி சம்மதிப்பானானால் தானும் தன் சகோதரன் சாவிற்குச் சம்மதிப்பதாக ஓர் நிபந்தனை வைக்கின்றான்.

(5) இவ்வளவுதானா, என் மருகன் சாவதில் எனக்குச் சற்றேனும் இரக்கமில்லை, என்று அவன் பெயரிற்கெதிரும் கொலைக்குறிப் புள்ளியைப் போடுகின்றான். தங்கள் ஆக்கத்திற்கெதிர் பிறருயிரைத் துரும்பளவும் மதிக்காத பாவியர் இவர்களும் வீரரென அழைக்கப்படுகின்றனர்.

(6) ஸீஸர் விட்டுச்சென்ற பொருளை இவர்கள் பகிர்ந்து கொள்ள நினைக்கின்றார்களாதலின், அவன் மரணசாஸனத்தைக் கைப்பற்றி, அங்கு எழுதிவைத்திருக்கின்ற கொடைகளைத் தவிர்ப்பதற்கு வழிதேடுகின்றனர்.

(7) ப்ரூட்டஸ்திறத்தினரை வென்றழித்தபின் உலகத்தைக் கைப்பற்றிக் கொள்வோம். பின் அதனை மூன்று பாகமாக்கி ஒன்றினை இந்த அற்பச் சிறு மனிதன் லெபிடியஸிற்குக் கொடுத்து விடுவதா—என்பது பொருள். ஆட்சியைக் கைப்பற்றவேண்டுமென்ற ஆசையே யன்றி ஸீஸரின் பழியைத் தீர்க்கவேண்டும் என்னும் தூயநோக்கம் சிறிதுமில்லை என்பது தெரிகின்றது.

(8) கரியதண்டனை = கொடிய தண்டனை. குரலினைக் கொண்டனை—அவன் அபிப்பிராயத்தையும் அனுமதியையும் பெற்றாய்.

(9) அரசியல்கட்சியைச் சேர்ந்தவர்கள் தம்மில் ஒருவர்பால் ஒருவர்வைத்த மதிப்பும், அவர்தம் நோக்கமும் இன்னதே. காரியம் ஆகும்வரையில் கழுதையையும் காலைப்பிடிக்

ஆண்டனி:—அன்னதேகாண் என்குதிரையும் ஆக்டேவியஸ். அதுபற்றியானதற்குத் தீனியமைத்துத் தருகின்றேன். பொருதற்கும் சுழல்தற்கும் நிற்றற்கும் நேரே பாய்ந்தோடற்கும் யான் கற்பிக்கின்றவோர் சந்து அது. அதன் உடலசைவு என் உணர்வினு லாளப்பெறுகின்றது. ஒருவகையில் லெபிடியஸும் அப்படியேதான். கற்பித்துப் பழக்கி முன்னே சென்று ஏவப்பெற வேண்டியவன் அவன். மலட்டுணர்வுப் பயல்; (11) இழிதகை எச்சில்களையும் போலிகளையும் புசித்து வாழ்பவன். சுவையறமற்றவர்கள் வழங்கி யொழித்தவைகளை இவனுக்கு முறையெனத் துவக்குகின்றன (12) ஓர் உடைமைப்பொருள் என்னும் பரிசல்லது அவனைப்பற்றியொன்றும் பேசவேண்டா. இனி, ஆக்டேவியஸ், பெரிய செய்திகளை நான் பேசக்கேள்—ப்ரூடஸ்ஸும் காஸ்வியஸும் சேனைகள் சேர்க்கின்றனர்: நேராக நாமவரை முற்படமுனைதல்வேண்டும்: ஆதலின், நமது உறவினைத்திரட்டி, நட்பினர்களை உறுதிசெய்து, செல்லுமளவு நம் சிறந்த சாதனங்களைச் செலுத்திக்கொளல் வேண்டும். இங்ஙனே சென்று நாம் கரந்துவரு மிடர்களைக் காப்பதுவும் வெளிப்படு விபத்துக்களுக்கு எதிர்விளப்புவதுவும் (13) தக்கபடி இயல்வ தெங்ஙனமென்பதுபற்றி மந்திரம்சூழ்வோம். (14)

ஆக்டேவியஸ்:—அவ்வாறே செய்வோம். பகைவர்பலரால் நெருக்குண்ட நாம் அனைத்தையும் இழப்பதோ ஈட்டுவதோவென்னுமோர் அரியநிலையில் இருக்கின்றோம். நயப்புற நகுகின்றாரிற் சிலர் குறும்புகள் ஒருகோடி தம் இதயத்தில் கொண்டுளாரென அஞ்சுகின்றேன். (15)

கும்படி வழங்கும் பழமொழி இத்திறத்தில் சிறிதும் வழுவாமல் நடைபெறுகின்றது. வசையுடை........வைக்கின்றோம் = நாம் இப்பொழுது சிலரைக் கொல்லப்போகின்றோமாதலின், அப்பழியை லெபிடியஸ்மீது சுமத்துவதற்குத்தான் அவனை நான் யோசனை கேட்டேனேயொழிய வேறன்று—என்பது பொருள். நிதி = அரசியல்அதிகாரம் முதலிய இலாபங்கள்.

(10) ஆக்டேவியஸ், ஆண்டனியைவிட வயதிற் சிறியவன். ஆண்டினியைப்போல் அரசியல் முறைகளில் பழுத்து முதிர்ந்த அனுபவம் இல்லாமையால், இவ்வஞ்சனைக்கு இவனுள்ளம் சிறிது கூசுகின்றது.

(11) ஆற்றல் இருந்தாலும் என்? இந்த லெபிடியஸ் தானாக ஒன்றும் இயற்றவல்ல திறமையுடையவனல்லன். என் குதிரியைப்போல் நான் நடத்திவைக்கும்படியே காரியங்கள் செய்வதற்கே உரியவன். மற்றவர்கள் செய்வதைப் பார்த்து அப்படியே தானும் செய்யப்புகுகின்றவனே யல்லாமல், தானாக ஒன்றையும் செய்யும் சிந்தனை இவனுக்கில்லை—என்பது பொருள். மலட்டுஉணர்வு = உயரிய காரியங்கள் பிறக்கும்படி தூண்டுகின்ற உணர்வு இன்மை.

(12) இழிதகை......துவக்குகின்றன. எச்சில் = மற்றவர் கையாண்டு கழித்தவை. போலி = மற்றவர் செய்வது போல் செய்துவரல். தானாக ஒன்றும் துவக்கும் குணம் இவனுக்கில்லை. மற்றவர்கள் செய்துசெய்து இதனில் இனிச் சுவையில்லை என்று எவைகளைக் கழித்துவிடுகின்றார்களோ, அவைகளையே இவன் புதுமைபாராட்டித் தான் செய்யத் துவக்குகின்றான்.

(13) எதிர்விளப்புவது = விபத்துக்களைத் தடுப்பது.

(14) மந்திரம்சூழ்தல் = ஆலோசனை செய்தல்.

(15) நட்புடையவர்போல் நம்முடன் உறவு காட்டுகின்றவர்களிற் பலர் நெஞ்சத்தில் வஞ்சனை அதிகம் உடையவர்கள் என்று அஞ்சுகின்றேன்—என்பது பொருள்.

களம் 1, முற்றிற்று.

கம்பராமாயணம்

ஆரணிய காண்டம்—6. கரன் வதைப் படலம்.

[495-வது பக்கத் தொடர்ச்சி]

இடையே ஞம்பேய ரேற்ற தாகுமே.

பண்டைநாள் இராகவன் பாணிவில்உண்டையுண்டதனைத்தன் மனத்தில் உன்னியுன்னி, இராவணன் இழைத்த தீமைபோல் களத்தினுள் தோன்றிய அக்கொடுமனக் கூனி துவக்கியகருமத்தை, மேலைநாள் உயிரொடும் பிறந்துதான் விளைகாலமோர்ந்து உடனுறைகடியநோ யனைய சூர்ப்பணகை இன்று நடத்திவைக்கத் தலைப்படுகின்றனள்.

மோகத்தால் மூக்கிழந்த இந்தச்சழக்கி, "காற்றினினும் கனலினினும் கடியானைக் கொடியானை உங்கள் கூற்றுவனை இப்பொழுதே கொணர்கின்றேன்" என்று சலஞ்சாதிக்க விரைந்துசென்று கரனுக்குமுன், சொரிந்த சோரியளாய் விரிந்தமேகமென விழுந்து வெந்தீயினால் புழுங்குநாகமெனப்புரண் டோலமிடுதலும் அவ்வடலரக்கன், "நின்னை இப்படிச்செய்து போனவர் யார்" என வினவுமளவில்,

இருவர் மானிடர் தாபத ரேந்திய
வரிவில் வாட்கையர் மன்மதன் மேனியர்
தரும நீரர் தயாதன் காதலர்
செருவி னேரு நிருதரைத் தேடுவார்

[இரண்டுமனிதர், தவவேடம் பூண்டவர், கட்டமைந்த வில்லும் வாளும் ஏந்திய கைகளையுடையவர், மன்மதன் போன்றவடிவுடையவர், தருமகுணமுடையவர், தயாதன் புத்திரர், போரில்எதிர்ப்படும் அரக்கர்களைத் தேடிவந்திருப்பவர்]

ஒன்று நோக்கல ருன்வலி யோங்கற
னின்று நோக்கி நிறுத்து நினைப்பினர்
வென்றி வேற்கை நிருதரை வேரறக்
கொன்று நீக்குது மென்றுணர் கொள்கையார்

[உன்வலிமையை ஒரு பொருளாக மதிக்கின்றாரலர். சிறந்த அறத்தினை நன்குஆராய்ந்து நிலைநிறுத்தும் கருத்தினர். வெற்றிவாய்ந்த வேலையேந்திய அரக்கரை அடியோடு கொன்றொழிப்போம் என்று நிச்சயித்த கொள்கையுடையவர்]

மண்ணி னேக்கரு வானினின் மற்றினி
லெண்ணி னேக்குறின் யாவர்க்கு நோக்கலாப்
பெண்ணி னேக்குடை யாளொரு பேதையென்
கண்ணி னேக்கி யுரைப்பருங் காட்சியாள்

[பூமியில், பார்ப்பதற்கரிய வானில், பாதாளத்தில், மனதில், தேடினாலும் ஒருவருக்கும்காண இயலாத பெண்மையோடுகூடிய அழகியபார்வையுடைய ஓர் இளமகள், என் கண்களால்பார்த்து வருணித்துச்சொல்ல முடியாததோற்றமுடையவள்]

கண்டு நோக்கருங் காரிகை யாடனைக்
கொண்டு போவ லிங்கையர் கோக்கென
விண்டு மேல்விழுந் தேனை வெகுண்டவர்
துண்ட மாக்கினர் மூக்கெனச் சொல்லினாள்.

[காணற்கரிய இவ்வழகிய பெண்ணைப்பார்த்து, இவளை இலங்கை யரசனாகிய இராவணனுக்குக்கொடுக்க எடுத்துக்கொண்டுபோக எண்ணி விரைந்து முயன்றஎன்னை அம்மனிதர் கோபித்து மூக்கைத்துண்டித்தனர்—என்று சொன்னாள்]

நாடகவிரைவுடன் நன்கு நடக்கின்ற இவ்வாசகத்தின் அமைதி கம்பருடைய நூலின்கண் அருமையன்றேனும் வருமிடந்தோறும் வியைந்துவதற்குரியதே. தனக்குவேண்டுமிடத்துக் கம்பர், முதனூலை எத்துணை தழுவிப் பின்பற்ற உடன்படுகின்றாரென்பதை இச்செவ்வியில் நன்கு காணலாம். வான்மீகி முனிவர் இந்தச் செய்தியைப் பின்வருமாறு வகுத்திருக்கின்றனர்:—

"யௌவனமான மிக அழகிய உருவமுள்ளவர்களாய், மகாபலசாலிகளாய், தாமரைபோல விசாலமான கண்களையுடையவர்களாய், மரவுரியும் மான்தோலும்உடுத்து, பழங்களையும் கிழங்குகளையும் புசித்து, வெகுபரிசுத்தர்களாய், ஐம்புலன்களையு மடக்கித் தருமத்தை நடத்தும் தபசிகளாய், கந்தர்வமன்னவருக்கு ஒப்பானவர்களாய், இராஜலக்ஷணங்கள் அமைந்த தசரதருடைய குமாரர்களான இராமலக்ஷ்மணர்களென்று இரண்டுசகோதரர்கள் இப்பொழுது இக்காட்டில் வந்திருக்கிறார்கள். அவர்கள் தேவர்களோ அல்லது மனிதர்களோ என்பதை அறியேன். எல்லாவிதலக்ஷணமுமமைந்து எல்லாவித நகைகளும் பூண்டிருக்கும் ஒரு அழகான சிறுபெண் அவர்களுடன் இருக்கிறாள். அந்தப் பெண்ணின் நிமித்தம் அவர்களால் நான் அநாதையாய் நெறிநீங்கியலையும் ஒரு பெண்போல அவமானம் அடைந்தேன். தீயநெரியில் ஒழுகும் அந்தப் பெண்ணையும் அவர்களையும் சண்டையிற்கொன்று அவர்களுடைய இரத்தத்தை நான்நுரையுடன் குடிக்க விரும்புகிறேன். இதுதான் என்முதல்கோரிக்கை. அண்ணா, நீதான் இதை நிறைவேற்றிவைக்க வேண்டும்; அம்மூவர்களுடைய இரத்தத்தையும் சண்டையில் நான் குடிக்கவேண்டும்"

இதனில்இவள் குருதிகுடிக்கவேண்டியவிரதமொழி தவிர மற்றவைகளைக் கம்பர் ஏற்றுக்கொண்டனர். சலங்கொண்டுபோனாளேனும் இராமலக்குமணர்தம் அழகுபெருமைதருமம் அனையமேன்மைகளை அவள் இருநூல்களிலும் பாராட்டாமலமைய இயலவில்லை. இதனில் இவ்வாக்கி, "நாசம்வந் துற்றகாலை நல்லதோர் பகையைப் பெற்றேன்" என்று பெருமிதங்கொண்ட இராவணற்குத்தான் தங்கையே என்பதைத் தெரியக் காட்டினாள். தன் மூக்கற்ற வரலாற்றை விளம்புவதில் சிறிதுபேதம்உளது. சீதையின் அழகைப்புகழ்ந்தவள் ஒழுக்கத்தைமறுத்ததேனென விளங்காததுடன், அந்தப்பெண்ணின் நிமித்தம் இவள் அநாதையாயது எங்ஙனமென்பதை எடுத்தியம்புவதின்றியே வடமொழியிற் பலபடி குழம்பினாள். எனினும், தென்மொழியில் அவள் இயம்பப்புகுந்த பொய்யுந் தெளிவடைந்தது. இராவணனுக்குக் கொண்டுபோய் அக்கட்டழகியைக் கொடுப்பதற் கெடுக்கப் புக்கதால் போக்கினர் வீரர் தன் மூக்கை யென்று புனைந்துகூறினாள். வான்மீகத்தின்படி, இராவணன்பால் கூறும்பொழுதே இந்தப்பொய்க்காரணம் இவள்வாயில் உருப்பெறலாயிற்று.

கேட்டனன்கரன்; கேடிழைத்தவரைக் காட்டுகவெனக் கடியசீற்றமூடன் எழுந்தனன். அருகிருந்த வீரர் பதினன்குபேர், "தருக இப்பணி எம்வயின்" எனத் தடுத்தலும், கரன்

நன்று சொல்லினிர் நானிச் சிறார்கண்மேற்
சென்று போர்செயிற் றேவர் சிரிப்பராற்
கொன்று சோரி குடித்தவர் கொள்கையை
வென்று மீளுதிர் மெல்லிய லோடென்றான்

[தக்கதே சொன்னீர். நான் இந்தச்சிறுவர்கள்மீது சென்று போர் செய்தால் தேவர்கள் சிரிப்பர். ஆகையால் நீங்களே அவர்களைக்கொன்று இரத்தத்தைக் குடித்து அவர் நம்மைக் கொல்வதாகக் கொண்டுள்ள கொள்கையை வென்று, அந்த மெல்லிய மாதினை எடுத்துக்கொண்டு திரும்பிவாருங்கள், என்றான்]

எழுந்தனர் இவ்வீரெழுவீரர்; மூக்கொடு நாணுமில்லாச் சூர்ப்பணகை அந்தகன் தூதென முன்செல்ல, இராகவன் வைகிடம் நண்ணினர். இராமனே இவர்களைச் சிறுதொழில் செய்துவிட்டான்.

மரங்கள் போனெடு வாளொடு தோள்விழ
உரங்க ளானடர்ந் தார்க்குர வோன்விடுஞ்
சரங்க ளோடின தைக்க வவர்கடஞ்
சிரங்க ளோடின தீயவ ளோடினாள்

[நீண்ட வாள்களுடன் தம் தோள்கள் மரங்கள்போல் வெட்டுண்டு விழவே, தம் மார்பினால் மோதிப் போர்செய்ய நெருங்கிய அவ்வரக்கர்மீது வலிமைவாய்ந்த இராமன் எய்த அம்புகள் ஓடித்தைக்க, அவர்தலைகள் அறுபட்டு ஓடின; அதுகண்ட கொடியவளாகிய சூர்ப்பணகையும் ஓடலுற்றாள்]

ஓடிச்சென்று உற்றது உரைக்கக் கேட்ட கரனும் கனன்று எண்ணில் பல்கோடி அடலரக்கர் புடைசூழப்போர்க்கோலங்கொண்டுபடைதிரண்டெழுந்து,

காடு தன்றி விசும்பு கரந்தென
நீடி யெங்கு நிமிர்ந்த நெடுங்கொடி
ஓடு மெங்கள் பசியென்று வந்தெழுந்
தாடு கின்ற வலகையி னுடவே

[காடுகள் அடர்ந்தெழுந்து ஆகாயத்தை மறைத்தது போல எங்கும் நீண்டு உயர்ந்த பெரியகொடிகள், "எங்கள் பசியெல்லாம் இனி நீங்கிவிடும்" என்று களித்தெழுந்தாடுகின்ற பேய்களைப்போல் ஆட]

புறப்பட்டு,

வந்ததுசேனை வெள்ளம் வள்ளியோன் மருங்கு மாய
பந்தமா வினையை மாளப் பற்றறு பெற்றி யோர்க்கு
முந்தரு நிலைய தாகி யுடனுறைந் துயிர்க டம்மை
அந்தகற் களிக்கு நோய்போ லரக்கிமுன் னாக வம்மா

[மாயையின் தொடர்ச்சியாலாகிய பெரிய கருமங்களை அழிக்கும்படி பற்றற்றதன்மையுடையவர்களுக்கும் விலக்கமுடியாத நிலையையுடையதாகி, உடம்புடன்தங்கி உயிரை எமனுக்குக்கொடுக்கின்ற நோயைப்போலச் சூர்ப்பணகை முன்னேசெல்ல அரக்கர் சேனைவெள்ளம் வள்ளலாகிய இராமனுக்கருகு வந்து சேர்ந்தது]

வருவது கரனொடு சேனையென்று உணர்ந்தனர் இப்பால் வீரர். உணர்தலும், முன்னைநாள் பரதன்சேனையைக் கங்கையின்கரையிற் கண்டவுடன், பகையுடன் வந்தனன் அக்கைகேயிமைந்தன் எனமயங்கிப் பதறிய இலக்குவன்,

கட்டினன் சுரிகையுங் கழலும் பல்கணைப்
புட்டிலும் பொறுத்தனன் கவசம் பூட்டமைத்
திட்டன னெடுத்தனன் வரிவி லேந்தலைத்
தொட்டடி வணங்கினின் றினைய சொல்லினான்
இருமையு மிழந்தவப் பரத னேந்துதோட்
பருமையு மன்னவன் படைத்த சேனையின்
பெருமையு நின்னொரு பின்பு வந்தவென்
ஒருமையுங் கண்டினி யுவத்தி யுள்ளநீ

எனவேண்டியவாறே, இவ்விடத்தும் அவ் விளைய வீரன்,

மின்னின்ற சிலையன் வீர
கவசத்தன் விசித்த வாளன்
பொன்னின்ற வடிம்பின் வாளிப்
புட்டிலன் புகையு நெஞ்சன்
நின்னின்று காண்டி யான்செய்
நிலையென விரும்பி நேரா
முன்னின்ற பின்வந் தோனை
நோக்கினன் மொழிய லுற்றான்

[பிரகாசிக்கின்ற வில்லையுடையவனும், வீரகவசத்தை யணிந்தவனும், கட்டிய உடைவாளை யுடையவனும் பொன்விளிம்பமைந்த அம்புறாத்தூணி உடையவனும், கோபத்தீயால் புகைகின்ற மனமுடையவனும் ஆகி, 'நீ இவ்விடமேநின்று யான்செய்யும் போரின் நிலைமையைக் காண்பாய்' என்று சொல்லி விருப்பமுடன் நேராக முன்வந்து நின்றதன் தம்பியாகிய இலக்குவனைப் பார்த்து இராமன் மொழியல் உற்றான்]

மொழிந்ததென்? பாதனொடு செருவேயில்லை, இக்கரனுடன் செருவிற்குத் தானே செல்வனெனச் செப்பினான் இராமன். இளையோன்றன் ஆற்றலை அயிர்த்ததாலன்றிது. வான்மீகத்தில், காரணம்யாதுஞ்சொல்லாமலே இராமன் கட்டளையிட்டு மறுத்தனன். இலக்குவனும் அதற்கடங்குவது கண்டு, "நாம் சொன்னபடி நமது தம்பி நடத்தினான்" என்று இராமன் உவகை எய்தினான். கம்பர் நூலிலோ இராமன், "நிருதர்

ஆவிதானே பறிக்குவென், என்று மாதவர்க்கு முன் நேர்ந்தனென், ஆதலின் அம்மொழி பழுதுறலாகாது" என்றோர் காரணங்கூறிப் போர்க்கோலம் பூண்டனன். கண்டனன் இளையோன், மூத்தோன் மொழியை மறுப்பதற் காற்றலனாயினும், போரின் ஆசைபுந்தியைப் பிடித்துந்த மீண்டும்,

மீளருஞ் செருவின் விண்ணு
மண்ணுமென் மேல்வந் தாலு
நாளுலந் தழியு மென்றே
நானுனக் குரைப்ப தென்னே
ஆளியின் றப்பி னுயிவ்
வமரெனக் கருளி நின்றென்
தோளினைத் தின்னு கின்ற
சோம்பினைத் தடைத்தி யென்றான்

[சிங்கம்போன்ற வலிமையுடையவனே, மீள்வதற்கு அரிய போரில் விண்ணிலிருப்பவரும் மண்ணிலிருப்பவரும் மேல்மேல் எதிர்த்தாலும் அவரனைவரும் ஆயுள்முடிந்து அழிவார் என்று நான் உனக்குச் சொல்லவும் வேண்டுமோ! இந்தப் போரை நீ எனக்குக் கொடுத்துநின்று என் தோள்களை அரிக்கின்ற சோம்பலைப் போக்குவாய்—என்று கூறினான்]

எவ்விதியிலும் எந்நிலையிலும் காரணம் ஒன்று கூறப்பெறுமாயின் அது கட்டளையின் வேகத்தைப் பலபடிகுறைத்துவிடும். முடவனுக்கே கைத்தடி இன்றியமையாமைபோல், தன்னிலை நிற்கலாற்றாக் கூற்றிற்கே காரணம் சார்பாகச்சேரவேண்டி வருகின்றது. இப்போரைத் தானே புரியவேண்டுமென்று சித்தம் வைத்தான் இராமன். அதனைச் சொல்லி அகற்றினால் இலக்குவன் வருந்துவான் என்னும் பரிவினால், நிருதரைக் கொல்வன் என்றுதான் முனிவருக்குக் கொடுத்த வாக்கைக் காரணமாக அமைத்தனன். இயற்றுதற் கர்த்தாவாகாமல் ஏவுதற் கர்த்தா ஆதலும் ஏற்குமே. இதனையுணர்ந்தே இலக்குவன், "அமர் எனக்கு அருள்" என்று குறிப்பிற் கூறினன். இவ்வுரை வருமென்றஞ்சியோ இராமன், "யானே பறிக்குவன்" எனப்பிரிநிலை ஏகாரம் பொருந்தவைத்தது. முனிவர்க்குக் கொடுத்த வாக்கில் இப் பிரிநிலை இருப்பதாகத் தெரியவில்லை. இப்படிப் பொய்ம்மைக்கும் வாய்மைக்கும் இடையே வருதற் கியல்வதாற்றானே, ஏகாரம் ஓர் இடைச் சொல் என்னலாயிற்று.

கலாநிலயச் சொல்லூடாட்டம். 4.

இடம்—வலம்

1. இந்திரன் நகரம்
5. வஞ்சனை
7. முதலை
8. அரசன் ஆதனம்
10. மாதர் கச்சு
12. முன்வினை
13. வாடு
16. சாந்தம்
17. பிறைச்சந்திரன்
19. ஓர் அரசன்
20. சுற்றத்தார்
22. மலை
23. கற்பகத்தின்மீது படரும் கொடி
25. பறவை
26. உபகாரம்
27. கொடுத்து
29. ஆடை
30. விடியற்காலம்

1	2		3	4	■	5	6	■
7		■	8		9			
10		11	■	12				■
	■	13	14		■		■	15
■	16			■	17		18	
19		■	20	21		■	22	
23		24			■	25		■
26			■	27			■	28
	■	29			■	30		

மேல்—கீழ்

1. ஒருவகைப் பாட்டு
2. ஒரு மரம்
3. கூர்மை
4. சந்திரன்
5. இந்திரன்
6. நாள்
9. வாசனை
11. நூதனம்
14. தங்குதல்
15. சுவர்
16. ஆஞ்சனேயன்
17. நுனி
18. புத்திரி
19. ஓர் ஆறு
21. நிறைதல்
24. பயனின்மை
25. புதுச்சேரி
28. களங்கம்

கடைசிநாள் :—1932 வருடம், ஜூலை மாதம், 25 தேதி

பரிசு:—கலாநிலயம், 1928, 1930, 1931, ஆகிய இவ்வருடங்களின் யாதாவது ஒன்றன் ஆப் லெதர் - கில்ட் பைண்ட் புத்தகம் ஒன்று; அல்லது இவ்வருடமேனும் அடுத்த வருடமேனும் ஒரு வருடத்திற்கு நம் பத்திரிகையை இலவசமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்.

1. இந்தக் கட்டடங்கள் யாதிரியாகவே வேறோர் காகிதத்தில் வரைந்துகொண்டு அதனில் விடையை எழுதி யனுப்பவும்.

2. அவ்வாறு அனுப்புபவர், அதனோடு நாலணாவுக்குக் காலணாத் தபால் தலைகள் (பதினாறு) அனுப்புதல் வேண்டும். இலங்கை வாசிகள் அவ்வூர்த் தபால் தலை 25 சதம் அனுப்பலாம். மலேயா தேசத்தவர் எட்டணா பெறுமான போஸ்டல் ஆர்டர்கள் அனுப்புதல் வேண்டும்.

3. பிழைபற நேரிய விடைகள் அனுப்பியவர்களுடைய பேர்களை எல்லாம் சீட்டுக் குலுக்கிப் போட்டு யார் பேர் வருகின்றதோ அவர் ஒருவருக்கு மட்டுமே பரிசு அளிக்கப்படும்.

4. இவ்வண்ணம் அவ்வவ்முறை பரிசு பெற்றவர்கள் தவிர, நேரிய விடைகள் ஆறு சொல்லூடாட்டங்களுக்குத் தொடர்ச்சியாக அனுப்பியிருப்பவர்கள் பெயர்களையெல்லாம் மற்றுமோர் முறை சீட்டுக் குலுக்கிப் போட்டு அதனில் பெயர் வருகிற ஒருவருக்கும், மேல் குறித்த வருடங்களின் யாதாவது ஒன்றன் தொகுதி இதழ்கள் பைண்ட் செய்யாமல் பரிசாக அளிக்கப்படும். இதுகாறும் நேரியவிடைகள் தொடர்ச்சியாக அனுப்பியிருப்பவர்களும் இப் பரிசிற்கு உரியவராவார்.

5. சொல்லூடாட்டங்களைப் பற்றிய எல்லாவிடயங்களிலும் மானேஜர் செய்கின்ற தீர்மானமே முடிவானது. இவைகளைப்பற்றிய எவ்விதக் கேள்வியும் எழுதலாகாது.

6. இந்தப் போட்டியில் நம் சந்தாதார்கள் மாத்திரமன்றி ஏனையோரும் கலந்துகொள்ளலாம்.

விடைகளை, **மானேஜர், கலாநிலயம், வேளாளர் வீதி, புரசைபாக்கம், சென்னை,** என்னும் விலாசத்திற் கனுப்பவும்.

199140

கலாநிலயச் சொல்லூடாட்டம் நம்பர் 3. விடையும் முடிவும்.

நேரான விடை :—

இடம் - வலம் :—1. கணபதி; 4. கமுகு; 6. கருமம்; 8. விதை; 10. புகல்; 12. கபம்; 13. சுரம்; 14. பலா; 15. மதுகரம்; 17. பகர்; 18. சிபி; 19. கரடு; 20. தகவு; 22. கண்ணி; 24. நவ; 25. நண்ண; 26. நட; 27. கைரவம்; 28. கிழவர்.

மேல் - கீழ் :—1. கம்பு; 2. பகல்; 3. திரு; 4. கம்பம்; 5. குவி; 7. மகரம்; 9. தையலார்; 11. கழுதை; 13. சுரபி; 14. பகடு; 15. மந்தநகை; 16. கசிவு; 17 பரணி; 19. கண்ணகி; 21. கவர; 22. கண்; 23. வேடர்; 25. நம்; 26. நவ.

நேரிய விடை அனுப்பியவர் :—K. A. ஷண்முக முதலியார், திருப்பத்தூர். A. விஜுசித்தம்பி, கேய்ட்ஸ். ஜான் செல்லையா ஜோஸப், சென்னை. V. S. கோவிந்த கிருஷ்ணன், கோம்பை. K. திருமலை ஜக்கையா, கோம்பை. C. M. இராஜேச்வரி, சென்னை. V. கோவிந்தசாமி, கணக்கம்பாளையம். S. K. P. T. சோமசுந்தரம், யாழ்ப்பாணம். V. S. இராமசுவாமி கவுடர், கோம்பை. V. P. கமலநாத முதலியார், சென்னை. முத்துராஜா, காட்டுப்புத்தூர். M. குழந்தைவேலுப் பிள்ளை, ஈச்சம்பட்டி. V. நவரத்னம், மவுண்ட் லெவினியா. பி. நா. பழ. நாகப்ப செட்டியார், வேந்தன்பட்டி. K. வேலுப் பிள்ளை, பேராதனை. S. N. இராமசுவாமி ஐயங்கார், சங்கரி துர்க்கம். C. பழனிக்குமரன், ஆலமரத்துப்பட்டி. முத்து, K. M. M. அருணாசலம் செட்டியார், தேவக்கோட்டை. V. மீனாக்ஷி சுந்தரம் ஐயர், பேரயூர். V. A. பர்னாண்டோ, கொழும்பு. K. இராஜகோபால், தாவரம். சி. கந்தையா, மன்னார். M. கங்கேசு, கெட்டா. V. சரவணமுத்து, மன்னார். A. இராமலிங்கம், கிளாங். S. தில்லையம்பலம், கிளாங். M. N. பிள்ளை, பினாங். S. M. சொக்கலிங்கம், கொழும்பு. C. திருஞான சம்பந்தம், உக்கிரன்கோட்டை. A. P. L. ஷண்முகம் செட்டியார், வேகுபட்டி. S. சந்தான கோபால ஐயர், கண்டாச்சிபுரம். S. வெங்கடரமணி, திருச்சி. U. N. இராமசாமி நாயுடு, உடுமலைப்பேட்டை. O. E. ஸைத் இஸ்மேல், மாந்தலே. T. R. வெங்கடாசலம் பிள்ளை, சென்னை. பரிசுபெற்றவர்:—A. இராமலிங்கம், கிளாங்.

வர்த்தமானம்

W. V. கோவிந்தசாமி ராஜூ:—நம் கலாநிலயத்தில் வெளிவரும் "குன்றுடையானும் மக்களும்" என்னும் கதையின் ஆசிரியராகிய திருவாளர் W. V. கோவிந்தசாமி ராஜூ அவர்கள் சென்றமாதம் 10உ கோவையில் அநாயாஸமாய் மாரடைத்து இறைவன் திருவடி சேர்ந்தார் என்பதைக் கேட்க எம்மைப்போல் இப்பத்திரிகையின் வாசகர்கள் அனைவரும் அருந்துயர் கொண்டு வருந்துவார். உடுமலைப்பேட்டையில் ஓர் ஏழைக்குடியில் ஒரு சிறு உபாத்தியாயருக்குப்புதல்வராய்ப்பிறந்த இவர் தன் முயற்சியாலும் கோவை ஜில்லாக் கல்விச் சங்கத்தார் உதவியாலும் உயர்தரக் கல்வியிற்றேர்ந்து அரசாங்கக் கல்வியிலாகாவில் அமர்ந்தனர். கூரிய அறிவினர், தமிழ்மொழிச் செல்வர், கம்பர்பால் கரைகடந்த காதலர், உரைநடை யினிமை வாய்ந்தவர், பொறையனைய பெருங்குணங்களுக்கு உறைவிடமானவர். தம்முடைய கல்விக்கொக்க அடக்கமென்னும் அச் சிறந்த அணிகலம் ஒருபோதும் நீங்காத ஒழுக்கத்தினர். கோபம் என்பதொன்று இவர் கொண்டதாகக் கண்டறியேம் என இவருடன் பயின்றிருப்பவர் அனைவரும் வியந்து பேசுவார். அறிவும் கல்வியும் ஒழுக்கமும் அடக்கமுடன் அருங்குணங்களும் தமிழின்பால் தழைத்த அன்பும் உடைய இவ் விந்தியப் பெருமகனை இழப்பதைப் பொறுப்பது எளியதன்று. அன்னார் உறவினர்களுக்கு எம் பரிவினைத் துயருடன் தெரிவிக்கின்றோம்.

முன்னர் எழுதியிருக்கும் "எங்கள் ஊர்" என்னும் சிறந்த நூலினோடு, இப்பொழுது கலாநிலயத்தில் வருகின்ற 'குன்றுடையானும் மக்களும்' என்னுமிக் கொங்குநாட்டுச் சரித்திரக் கதையினாலும் திருவாளர் கோவிந்தசாமிராஜூ அவர்களது நினைவு தமிழுள்ளளவும் நிலைநிற்கும் என்பதில் ஐயமில்லை. இதனை இவர் முழுவதும் எழுதிவைத்திருக்கின்றாராதலின், இக்கதை இவ்விதழ்களில் முடிவுவரை வருவதாகும்.

***

கரந்தைத்தமிழ்ச்சங்கத்தின் 21 வது ஆண்டு விழா சென்றமாதம் 25, 26 தேதிகளில் திருவாளர் வேங்கடசாமி நாட்டாரவர்கள் தலைமையில் இனிதுநடைபெற்றபோது தமிழரென்றிருப்போரெல்லாம் நாடோறும் பதினைந்து நிமிட அளவேனும் சிறந்த தமிழ் நூலொன்றை ஓதும்படி ஓர் விரதம் கொள்ள வேண்டுமென நிறைவேறிய தீர்மானம் மிகவும் பாராட்டற்குரியது.

***

தமிழ்நாட்டுப் பலசாலிகள்:—இரண்டாவது மகாநாடு கானாடுகாத்தானில் ஆகஸ்டு மாதம் 13, 14 தேதிகளில் நடைபெறும். மகாநாட்டுத் தலைவர், ஸ்ரீமான் K. V. அய்யர். வரவேற்புக் கழகத்தலைவர், ஸ்ரீமான் S. Rm. CT. ஜம்புலிங்கம் செட்டியார். காரியதரிசி ஸ்ரீமான் AL. சுவாமிநாதன் செட்டியார்.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

டானிக்குகள் :
ச்யாவனப்ராச
ஜீவஸுதா
பாதாமி லேகியம்
தந்வந்தரி லேகியம்

தைலங்கள்:
அமிர்தாமலக
பிருங்காமலக
ஸுகுமார
ஹிமஸாகர

"பாலஸுதா" குழந்தைகளுக்குச் சிறந்த டானிக் (ரூபா 1-0-0)
காஸ்ட்ராலக்ஸ்: சுத்தம் செய்த மூலிகை சேர்ந்த ஆமணக்கெண்ணெய் (6 அவுன்ஸ் 8 அணா)
ஸ்ப்ளிவரால்: குழந்தை கட்டிக்கும், ஜ்வரக் கட்டிக்கும் (ரூபா 2-0-0)
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை, (அணா 4) கோரோஜனை மாத்திரை, (அணா 6) பால சஞ்சீவினி (அணா 4)
ம.ட.ச்யாவனப்ராசா ம.ட.பிருங்காமலகதைலம் கோரோஜனமாத்திரை
"நஞ்சன்கூடு பல்பொடி"
சாதாரணம்-பாக்கேட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) ம.ட.வ.மெடிகேடட்-டப்பி
(தபால் பில்லையுடன் லிஸ்டுக்கு எழுதவும். அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.)

KALANILAYAM
Reg. No. M. 2324.

— சரஸ்வதி பவுண்டரி —

தந்திவிலாசம்:—காஸ்டிங்.] [Established 1904] [டெலிபோன் நெ:—3002

96. புளியந் தோப்பு ஹைரோட், பெரம்பூர் பாரக்ஸ், சென்னை.

எம்மிடம் தேர்ச்சிபெற்ற இந்தியத் தொழிலாளர்களால் தயாரிக்கப்பட்ட ரங்கூன் & அமரிக்கன் டைப், ரைஸ்ஷெல்லர்களும், பாலிஷிங் கோன்களும், மூன்று தினுசாயுள்ள சவரன் டை பிரஸுகளும்; வெள்ளிப் பாத்திரங்கள் செய்யும் பிரஸுகளும், பொன் வெள்ளித் தகட்டாலைகளும், கரும்பாலைகளில் கல்கத்தா சைஸ்களும், சாதா மூன்று கால் கரும்பாலைகளும், தண்டவாளச் சுழல்படிகளும், தண்டவாளத் தூண்களும், பலவிதமானத் தண்டவாளக் கிராதிகளும், ஆயில் காஸ் மோட்டார் எஞ்சின்களுக்குத் தேவையாயுள்ள ஸிலிண்டர், வாட்டர் ஜாகட்டுக்களும், மற்றத் தனிச் சாமான்களும், எங்கல்பர்க் டைப் நெம்பர் 1, 2, 3, 4, 7 & 8 பால்பேரிங் & சாதா ரைஸ் ஹல்லர்களும், அவைகளுக்குவேண்டிய தனிச் சாமான்களும், தண்டவாள சாதா புல்லிகளும், படபாதிப் புல்லிகளும், கிடைக்கும். ஆயில் காஸ் ஸ்டீம் எஞ்சின்களின் லைனரை ரீபோர் செய்தும் புதிய பிஸ்டன் போட்டும் கொடுக்கப்படும்.



முனிஸிபாலிடிகளுக்குத் தேவையாயுள்ள எலக்ட்ரிக் விளக்குப் போஸ்டுகளும், சாதாரண 1, 2, 3, 4, 5 கிளையுள்ள லாந்தர் போஸ்டுகளும், வாராவதிக்குப் போடக்கூடிய லாந்தர்போஸ்டுகளும் பிராக்கட்டுக்களும், மேனோல் கவர்களும், திம்மிசுகளும், குப்பைவண்டி இன்லெட் அவுட்லெட் வால்வுசெட்டுகளும், பைப்பு பிட்டிங்கிற்கு வேண்டிய தண்டவாளக் குழாய்களும், கப்ளிங் பைப் டீ, பிரான்ச் ரெடியூஸர்களும், தோட்டத்தில் போடக்கூடிய தண்டவாளப் பெஞ்சு கால்களும், பள்ளிக்கூடத்துக்கு வேண்டிய சாதா மடிப்புப் பெஞ்சுகளும் கிடைக்கும்.

மைல்ஸ்டீல் தகட்டினுல் செய்த பாயிலர் சிம்னிகள், டாங்குகள், நெல் அவிக்கும் பாய்லர்கள், டிரஸ்கள், வாராவதிகள் இன்னும் பலவிதமான ரிவிட்டு வேலைகள் யாவும் நேர்த்தியாய்த் தயாரித்துக் கொடுக்கின்றோம்.

சார்ஜிகள் மிகவும் சரசம். குறித்த காலந் தவறுவதில்லை. கேட்லாக்கிற்கு எழுதவும்.

— தேகபலம் —

:: புத்திர சந்தானம் ::

இவைகளையடைய எங்கள் ஆதங்க நிக்ரஹ மாத்ரைகளை உபயோகியுங்கள்.

சென்ற 51 வருஷங்களாகப் பேரும் புகழும் பெற்று வருகின்றன.

மேலும் தேக அசதி, மலச் சிக்கல், ஞாபகக் குறைவு முதலிய வியாதிகளைக் கண்டிக்கின்றன.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1.
5 டப்பிகள் ரூ. 4.

இனும்! காம சாஸ்திரம் இனும்!

கேட்போருக்கு இனமாகவும், தபாற்செலவில்லாமலும் அனுப்பப்படும்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

ஆ. ஸி. கஸ்தூரிரங்கய்யர் B.A., L.T.,
இயற்றிய

: : இராமாயண வினு விடை : :

இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்கு அச்சிடப்பட்டு 380 பக்கங்கள் கொண்டது. எழு காண்டங்களும், அரிய நீதிகளும் தெளிவுவாய்ந்த அனுபந்தகளும் அடங்கியது. விலை ரூபா 1 8 0

பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையார்ப்பேட்டை
வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்

NATIONAL INSURANCE COMPANY, LIMITED.

Head Office:
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

New Policies Issued in 1931 for over	Rs. 1,32,33,000
Showing an increase over the New Business figure for 1930 of	16.54 %
Claims paid up to end of 1931 over	Rs. 90,00,000
Invested Funds amount to over	Rs. 1,75,00,000

LOW RATES LIBERAL CONDITIONS
NEW TABLES NEW BENEFITS

For particulars & Agencies please write to:—

R. G. DAS & Co., *Managers.* OR The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras.

FIRE & ACCIDENT RISKS
covered by
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)